வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 05 | 06.11.2023 புதன்கிழமை | இதழ் : 338 | பக்கங்கள் : 12




## புலமைப்பரிசில் பரீட்சையை அரசாங்கம் நிறுத்த வேண்டும்!

### மைத்திரிபால சிறிசேன வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 06

ஐந்தாம் தரத்தில் நடத்தப்படும் புலமைப்பரிசில் பரீட்சை நிறுத்தப்பட வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன எம். பி. தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான வரவு - செலவு திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் கல்வி துறையில் நகர் புறம், கிராமிய புறம் மற்றும் தோட்ட புற என்று வேறுபாடுகள் காணப்படுவதால் கொழும்பில் கல்விக்கான போட்டி அதிகளவில் உள்ளது. பின்தங்கியுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை அந்தப் பிரதேசங்களின் ஏழ்மை நிலையை

11

## பிரபாகரனை வைத்து அரசியல் செய்வது அவரை அவமானப்படுத்தும் செயலாகும்!

### நேர்மையான தலைவர் என்று பாதுகாப்பு செயலர் புகழ்ச்சி

கொழும்பு, டிசெ. 06

பிரபாகரனும் அவரின் குடும்பத்தினரும் இறுதிப் போரில் உயிரிழந்து விட்டனர். அவர்களை வைத்து இனி எவரும் அரசியல் செய்ய முடியாது. அது அவர்களை அவமானப்படுத்தும் செயல். பிரபாகரனின் கொள்கைகளில் எனக்கு உடன்பாடு இல்லை. ஆனால், அவர் நேர்மையான ஒரு தலைவர்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான ஜெனரல் கமல் குணரட்ன.

துவாரகா என்ற பெயரில் மாவீரர் நாளன்று வெளியான காணொலி தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"தமிழீழ விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு நிகராக தமிழர்கள் தரப்பில் இனி எவருமே வர முடியாது. அவரின் மகள் துவாரகா பேசுகின்றார் என்று கடந்த நவம்பர் 27ஆம் திகதி வெளியான காணொலி போலியானது. இந்த காணொலி புலம்பெயர் தமிழர்களின் ஒரு குழுவால் திட்டமிட்டு தயாரிக்கப் பட்டு

11

# தடைகள் மூலம் இலங்கைக்கு அழுத்தம் ஏற்படுத்த வேண்டும்!

### பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தல்

லண்டன், டிசெம்பர் 06

**இலங்கைக்கு எதிராக தடைகள், வர்த்தக வரிகள் மூலம் அதிகூடிய அழுத்தங்களை கொடுக்கவேண்டும் என்று பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.**

11





## 21 வயதுக்குள் பட்டப் படிப்பு விரைவில் கல்வி சீர்திருத்தம்!

### கல்வி அமைச்சர் உறுதி

கொழும்பு, டிசெ. 06

உத்தேச கல்வி சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால் நாட்டின் பிள்ளைகள் 21 வயதுக்குள் பட்டப் படிப்பை நிறைவு செய்வதற்கு வாய்ப்பு கிடைக்கும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் நேற்று பாராளுமன்றில் நடந்த பட்ஜெட் விவாதத்தில் உரையாற்றியபோதே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், க.பொ.த சாதாரண தர பரீட்சை மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகளிலும் மாற்றங்கள் முன்மொழியப்பட்டுள்ளன என்றும் கூறினார். (ஐ)

## அதிகாரங்களை வழங்க முன்னர் மாகாண சபை தேர்தலை நடத்துக

### சபையில் தெரிவித்தார் பீரிஸ் எம். பி.

கொழும்பு, டிசெ. 06

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தில் பல்கலைக்கழகங்களை உருவாக்கும் அதிகாரத்தை மாகாண சபைகளுக்கு வழங்கப்படுவதாக அரசாங்கம் முன்மொழிந்துள்ளது. அப்படியானால் முதலில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும். மாகாண சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலையில் எவ்வாறு பல்கலைக்கழகங்களை உருவாக்க முடியுமென எதிரணியின் சுயாதீன உறுப்பினர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கேள்வியெழுப்பினார்.

11

## ஆசிய அபிவிருத்தி வங்கியும் இலங்கைக்கு உதவுகின்றது!

கொழும்பு, டிசெ. 06

ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து இலங்கைக்கு 60 கோடி டொலர்கள் கிடைக்கவுள்ளன என்று மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணை கிடைத்த பின்னர் தவணை முறையில் இந்தத் தொகை கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வரலாறு காணாத அந்நியச் செலாவணி கையிருப்பு குறைவால் கடந்த ஆண்டு

11

## அதிக போதை பாவனையால் இளைஞர்க்கு கிருமி தொற்று

### யாழிலேயே இந்த அவலநிலை

யாழ்ப்பாணம், டிசெ. 06

யாழ். மாவட்டத்தில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனையால், நுரையீரல் மற்றும் இருதய "வால்வு" ஆகியவற்றில் கிருமி தொற்றுக்குள்ளாகி யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்கு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று மருத்துவமனை தகவல்கள்

11

## யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழில் சட்ட கல்வி கற்க வாய்ப்பளியுங்கள்!

### சிறீதரன் எம். பி. கோரிக்கை

கொழும்பு, டிசெ. 06

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் பீடத்தை ஆரம்பிக்கவும் சட்ட பீட மாணவர்கள் தமிழ் மொழியில் சட்டக் கல்வியைத் தொடர்வதற்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அத்துடன், வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரியர்களின் நலன்களுக்காக தேசிய கல்வி நிறுவனத்தின் கிளையை மாங்குளத்தில் நிறுவ வேண்டும் - என்று இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தனது உரையில்,

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 'கல்வியியல் பீடம்' உருவாக்கப்படவில்லை. யாழ்ப்பாண

11

## காணாமல் போனோர் பணிமனை மக்கள் நம்பிக்கையை பெற்றுள்ளது

### பிரிட்டிஷ் பாராளுமன்றுக்கு இலங்கை கடிதம்!

லண்டன், டிசெ. 06

காணாமல் போனவர்களுக்கான பணிமனை (ஓ. எம். பி.) மக்களின் நம்பிக்கையை பெற்றுள்ளது என்றும் 16 பேர் உயிருடன் இருப்பதையும் மூவர் உயிரிழந்ததையும் அது கண்டறிந்துள்ளது என்று தெரிவித்து பிரித்தானியாவுக்கான இலங்கை தூதரகம் ஆவணம் ஒன்றை பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

இலங்கையில் போர் குற்றங்களில் ஈடுபட்ட முன்னாள் இராணுவ தளபதி சவேந்திர சில்வா உள்ளிட்டவர்களுக்கு தடை விதிப்பது தொடர்பான விவாதம் நேற்று பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இந்த விவாதத்துக்கு முன்னராக பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இலங்கை தூதரகம் மேற்படி ஆவணத்தை அனுப்பிவைத்துள்ளது என்ற தகவலை பி. பி. சி செய்தி சேவையின்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

புலம்பெயர் அமைப்புகளின் சில பிரமுகர்களும் தாயகத்திலிருந்து சில பிரமுகர்களும் திடீரென்று புதுடில்லிக்கு பயணமாகியிருந்தது பற்றி இந்தப் பத்தியில் முன்னரும் ஒரு தடவை எழுதியிருந்தேன்.

எப்படி இப்படியொரு பயணத்தை திடீரென்று ஏற்பாடு செய்தார்கள் என்பது குறித்தே பலரும் ஆச்சரியத்துடன் அதனைப் பார்த்ததையும் காணமுடிந்தது.

இந்தப் பயணத்தை அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ்தான் ஏற்பாடு செய்தது என்பது இப்போது தெரியவந்திருக்கின்றது.

இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு தீர்வு காண வெறுமனே இங்கிருந்து கடிதம் எழுதிவிட்டு காத்திருப்பது, 'கடவுள் உதவி செய்வார்' என்று எதிர்பார்த்துக் கொண்டு இருப்பதற்கு ஒப்பானது என்றும் நாமும் முயற்சி செய்தால்தான் நமக்கு கடவுளும் உதவி செய்வார் எனவும் இந்தப் பத்தியில் எழுதியதுடன், அவர்களின் இந்த பயணத்தை ஊர்க்குருவி பாராட்டியும் இருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

ஆனாலும், இப்போது அந்தப் பயணம் 'நாமே நமக்கு வைக்கும் செய்வினை' என்பதுபோல ஆகியிருக்கிறதோ என்று எண்ண வைத்திருக்கின்றது.

சில வருடங்களுக்கு முன்னர் சங்கிலியன் மன்னனின் நானூறாவது நினைவு தினத்தை சிவசேனை தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் ஏற்பாடு செய்திருந்தது பலருக்கும் ஞாபகமிருக்கலாம்.

அந்த வைபவத்தில் கலந்து கொள்வதற்காக புதுடில்லியிலிருந்து இரண்டு பிரமுகர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். 'இந்து போராட்டக் குழு' என்ற பெயரில் டில்லியில் இயங்கும் அமைப்பை சேர்ந்த அருண் உபாத்தியாவும் அவர் துணைவி தீட்சவுமே அந்த வைபவத்தில் கலந்துகொண்டவர்கள். அந்த வைபவம் தொடர்பாக சச்சிதானந்தன் தகவல்களை பகிர்கின்றபோது அவர்களின் தொடர்பு இலக்கத்தையும் சேர்த்தே பகிர்ந்திருந்தார்.

இதனையடுத்து அவருடன் தொடர்பு கொண்ட அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸை சேர்ந்த கிருசர் இளங்கோ என்பவர் அவருடன் உரையாடியதையடுத்து அவர் அந்த அமைப்பு குறித்து ஆராய்ந்தபோதே அவருக்கு சில விடயங்கள் வெளிச்சத்துக்கு வந்திருந்தனவாம்.

அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் தலைவர் ஒரு கிறிஸ்தவ மதமாற்ற சபையைச் சேர்ந்தவர் என்ற விபரம் அவருக்கு தெரியவந்ததைத் தொடர்ந்து உபாத்தியா, அவருடனான தொடர்பை தவிர்த்து விட்டதாகவும் ஆனாலும் பின்னர் இந்தியா சென்றிருந்த அவர், இப்போது தமிழ் காங்கிரஸுக்கு தானே தலைவர் என்றும் கூறி அவருடன் தொடர்பை ஏற்படுத்தியிருக்கிறார்.

அவரின் தொடர்பை பயன்படுத்தியே இந்த பயணத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்தியாவில் ஆளும் பாரதிய ஜனதா கட்சியையே வழிநடத்துகின்ற ஆர். எஸ். எஸ். அமைப்புடன் தொடர்பில் இயங்கும் அருண் உபாத்தியா மூலமாக ஆளும் தரப்பை அணுகலாம் என்ற எண்ணத்திலேயே இந்தப் பயணத்தை ஏற்பாடு செய்திருந்தார்களோ தெரியவில்லை.

ஆனால், மிக இரகசியமாகப் பேணப்பட்ட இந்த பயண ஒழுங்குகள், அவர்களின் பயணத்துக்குப் பின்னர் வெளித் தெரிய, அங்கு சென்றிருக்கின்ற இந்தக் குழுவைப் பற்றிய விவரங்களை தேடும் பணியைத் தொடங்கிய உளவு அமைப்புகள் அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸுக்கு இப்போதும் அந்த கிறிஸ்தவ சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரே தலைவராக இருப்பதும் அந்த அமைப்பு அண்மையில் பிரதமர் மோடி அவுஸ்திரேலியா சென்றிருந்தபோது அவருக்கு வழங்கப்பட்ட வரவேற்பில் கலந்துகொள்ள விரும்பியபோதிலும் அவர்கள் கலந்கொள்ள அனுமதிக்கப்படவில்லை என்ற விவரங்களும் தெரியவந்திருக்கின்றன.

இதனையடுத்து, இப்போது அருண் உபாத்தியா இந்து அமைப்புகள் மத்தியில் அம்பலப்பட்டு நிற்கிறார் என்கின்றன புதுல்லியில் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

"தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன்" என்பது போல ஆளாளுக்கு தமிழ் மக்களுக்கு தலைமை தாங்க புறப்படுவதால் தமிழினம் இன்று அம்பலப்பட்டு நிற்கின்றது. வழிகாட்ட நல்ல தலைவர்கள் இல்லாததும் இதற்கு காரணம் என்பதையும் மறுப்பதற்கு இல்லைத்தான்.!

தமிழ் கட்சிகள் - அமைப்புகள் இடையே ஒற்றுமை ஏற்படாதவரை - ஏற்பட்டாலும் ஓர் ஒழுங்கான கட்டமைப்பு உருவாக்கப்படாத வரை இதுபோன்ற சம்பவங்கள் நிகழ்வதையும் தடுக்கமுடியாது.

அப்படியொரு நிலை வந்தால், அந்த அமைப்பின் பிரதிநிதியாக ஒருவரை புதுடில்லியிலேயே நிரந்தரமாக தங்கவைத்து அங்குள்ள கொள்கை வகுப்பாளர்களையும் கருத்துருவாக்கிகளையும் அணுகவேண்டும்!!

**- ஊர்க்குருவி.**

# போலி கல்வி நிறுவனம் நடத்தி ஏமாற்றிய பெண் கைதானார்!

*கொழும்பு, டிசெ. 06*

பம்பலப்பிட்டி லொரிஸ் வீதி பகுதியில் போலி கல்வி நிறுவனம் ஒன்றின் பணிப்பாளராக கடமையாற்றிய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதி பம்பலப்பிட்டி பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கிரியுல்ல, நாரங்கமுவ பிரதேசத்தை சேர்ந்த 24 வயதுடைய யுவதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிறுவனம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாணவர்களை இணைத்து, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வேலைகளுக்குத் தேவையான டிப்ளோமா மற்றும் மேம்பட்ட டிப்ளோமா கல்வியை வழங்குவதாக சமூக ஊடகங்களில் விளம்பரங்களை வெளியிட்டு பயிற்சி பட்டறைகளை நடத்தி வருகிறது.

சட்டபூர்வ அங்கீகாரம் இல்லாமல் கல்வி கற்றுத் தந்த பிறகு போலி டிப்ளமோ சான்றிதழ்களை அந்த நிறுவனம் வழங்கியிருப்பது தற்போது தெரியவந்துள்ளது.

டிப்ளோமா பாடநெறி ஒன்றிற்கு, பாடநெறி வகைக்கு ஏற்ப, ஒரு இலட்சம் முதல் நான்கரை இலட்சம் ரூபாய் வரை பணம் அறவிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மோசடியாக பணம் பெற்றுக் கொண்டமை தொடர்பில் 43 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற போதிலும், குறித்த ஆணைக்குழுவின் பதிவுகள் இன்றி சட்டவிரோதமான முறையில் இந்த நிறுவனம் நடத்தப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் எனவும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இந்த மோசடிகளில் சிக்கியவர்கள் சுமார் ஆயிரம் பேர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிறுவனம் பல்வேறு இலத்திரனியல் உபகரணங்களை பயன்படுத்தி வேலைவாய்ப்பு வழங்குவதுடன் உயர்கல்விக்கான விளம்பரங்களை வெளியிட்டு பணம் திரட்டுவதும் மேலதிக விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த போலி நிறுவனத்தின் இணை பணிப்பாளராக செயல்பட்ட மட்டக்குளிய பிரதேசத்தை சேர்ந்த 25 வயதுடைய சந்தேக நபரை கைது செய்வதற்கான விசாரணைகளை பம்பலப்பிட்டி பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# விடுமுறை எடுத்த 99 வீதமான பல்கலை. ஆசிரியர்கள் வெளிநாடு செல்லவில்லை!

*கொழும்பு, டிசெ. 06*

வெளிநாடு செல்வதற்காக ஏழு வருட விடுப்பு எடுத்துள்ள பல்கலைக்கழக ஆசிரியர்களில் 99 வீதமானவர்கள் வெளிநாடு செல்லாமல் இலங்கையில் வேறு பணிகளை செய்து வருவதாக பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட உறுப்பினர் எஸ். பி. திஸாநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

2020 - 2023ஆம் ஆண்டு வரையிலான தகவல்களை ஆராய்ந்ததில் இந்த உண்மைகள் தெரியவந்ததாகத் தெரிவித்த எஸ். பி. திஸாநாயக்க, அந்தந்த வருடங்களில் வெளிநாட்டு விடுமுறை எடுத்தவர்கள் ஏழு பேரை தவிர வேறு எவரும் வெளிநாடுகளுக்கு செல்லவில்லை என்றும் தெரிவித்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் 80, பேராதனையில் 41, ஜெயவர்த்தனபுர 35, களனி 54, திறந்த பல்கலைக்கழகத்தில் 17, ருஹுணு பல்கலைக்கழகத்தில் 81 என பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஏழு வருட விடுமுறை எடுத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் வரவு - செலவு திட்டம் மீதான பாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே திஸாநாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# ஊவா ஆளுநரின் நடவடிக்கையால் தமிழ் மொழிக்கு உரிய இடமில்லை!

**வடிவேல் சுரேஷ் எம். பி.**



*கொழும்பு, டிசெ. 06*

ஊவா மாகாணத்தில் தமிழ் மொழி அமுலாக்கம் அங்கு நியமிக்கப்படுகின்ற ஆளுநர்களின் நடத்தை காரணமாக இல்லாமலாக்கப்பட்டு வருகின்றது. மலையகம் தொடர்பான போதுமான அறிவு இல்லாமையே இதற்கு காரணமாகும் என எதிர்க்கட்சி உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வரவு - செலவு திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், மலையகத்தின் சில பாடசாலைகளுக்கு இலவசக் கல்வியை பெற்றுக்கொள்வது தடையாக இருந்து வருகிறது.

மலையகத்தில் பாடசாலைகளில் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளபோதும் அந்த பாடசாலைகளுக்கு தேவையான ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

பதுளை மாவட்டத்தில் பசறை தொகுதியில் தமிழ் மொழி மூல 3 தேசிய பாடசாலைகளே இருக்கின்றன. இவைகளில் வளங்கள் இருந்தாலும் போதிய ஆசியர்கள் இல்லை. குறிப்பாக கல்வி பொதுத் தராதர உயர்தர மற்றும் சாதாரண தர பாடங்களுக்கு கணித, விஞ்ஞான பாடங்களுக்கு ஆசிரியர் இல்லை.

அதனால், மலையக பாடசாலைகளுக்கும் கல்வி பொதுத் தராதர உயர்தர மற்றும் சாதாரண தர பாடங்களுக்கு தேவையான ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன், ஊவா மாகாணத்தில் தமிழ் மொழி அமுலாக்கம் ஏற்கனவே இருந்து வந்தது. ஆனால், மாறி மாறி வந்த ஆளுநர்கள், மலையகத்தின் கல்வி. சுகாதாரம் என அனைத்தையும் மட்டம் தட்டி இருக்கிறார்கள்.

நியமிக்கப்படும் ஆளுநர்கள் வெளிப் பிரதேசத்தை சேர்ந்தவர்கள். அதனால் அவர்களுக்கு மலையகம் தொடர்பாக போதுமான அறிவு இல்லை.

ஊவா மாகாணத்தில் 202 தமிழ் முஸ்லிம் பாடசாலைகள் இருக்கின்றன. இந்த பாடசாலைகளில் தமிழ் மொழி அமுலாக்கம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன. தமிழ் கல்வி பணிப்பாளர்கள் ஓய்வு பெற்றுச் சென்றால் அந்த இடத்துக்கு தமிழ் மொழி மூலமான பணிப்பாளர் நியமிக்கப்படாமல் வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

ஊவா மாகாணத்தில் தமிழ் மொழி அமுலாக்கம் அங்கு நியமிக்கப்படுகின்ற ஆளுநர்களின் நடத்தை காரணமாக இல்லாமலாக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மலையக பிரதேசங்களில் பின்தங்கி இருக்கும் கல்வி அபிவிருத்தியை முன்னேற்றுவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது. அதனை அவர் செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

ஈழநாடு
Eelanadu
06.12.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், கார்த்திகை 20

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மீட்பர்கள் வெளியில் இல்லை

யுத்தம் முடிவுற்று பதினான்கு வருடங்கள் முடிந்துவிட்டன. யுத்தம் என்னும் சொல்லே தமிழர்களைப் பொறுத்தவரையில் சிக்கலானது. சிங்களவர்களைப் பொறுத்தவரையில் நடந்தது யுத்தம் – ஆனால், தமிழர்களைப் பொறுத்தவரையில் போராட்டம். சமாதான ஒப்பந்த காலத்தில் விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகம் ‘மானுடத்தின் தமிழ் கூடல்’ என்னும் பெயரில் நிகழ்வுகளை நடத்தியிருந்தது. திருகோணமலையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் – விடுதலைப் புலிகளின் மாவட்ட தளபதி ஒருவர் இவ்வாறு பேசியிருந்தார் – அதாவது, “போர் அழிவுகளை கொண்டுவரும் ஆனால், போராட்டம் அழிவுகளிலிருந்து மீட்சியை கொண்டுவரும்”, ஆனால், இறுதியில் தமிழர்களுக்கான போராட்டமும் தமிழர்களுக்கு பேரழிவையே வழங்கியிருக்கின்றது. இந்த அழிவிலிருந்து மீள்வதற்கு என்ன வழியென்னும் கேள்விக்கான பதிலை இன்றுவரையில் ஈழத் தமிழ் மக்கள் கூட்டத்தால் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்தப் பின்புலத்தில்தான் – யாராவது வரமாட்டார்களா – எங்களது நிலைமை மாறிவிடாதா – என்னும் ஏக்கத்துடன் தமிழ் மக்களின் காலம் கழிந்து செல்கின்றது. போர் முடிவில், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவராக இருந்த பிரபாகரன் இறக்கவில்லை என்னும் கதையொன்றை மக்கள் நம்ப வேண்டும் என்றே புலம்பெயர் சூழலிலுள்ள புலி ஆதரவாளர்கள் விரும்பினர். தங்களின் விருப்பத்தையே மக்களுக்கு கூறினர். களத்திலுள்ள தலைமைகளும் உறுதியான அறிவிப்பை வெளியிடவில்லை – அதற்கான துணிவை காண்பிக்கவில்லை. விடயங்களில் மௌனம் காக்கவே விரும்பினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின பலவீனத்தை வெளியில் உள்ளவர்கள் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். குறிப்பாக, தமிழ் நாட்டிலுள்ள புலி ஆதரவாளர்கள் என்று தங்களை அடையாளப்படுத்திக் கொண்டவர்கள். பிரபாகரன் நலமாக இருக்கின்றார் – அவருடன் நேற்றுத்தான் பேசினேன் என்றவாறான புனைகதைகளை மக்களுக்குள் பரப்பினர். முப்பது வருட காலம் இலங்கை தீவை தனது இராணுவ வலிமையால் கட்டுப்படுத்திய ஒருவர் தொடர்பில் கூறப்படும் புனைகதைகளை மக்கள் இலகுவாக நம்பிவிடுவர் – அதில் ஆச்சரியம் இல்லை.

விடுதலைப் புலிகளின் தலைமை தொடர்பில் புதிர்கள் நிறைந்த கதைகளைக்கூற முற்பட்டதால் மீட்பர்கள் தொடர்பில் அதீத நம்பிக்கைகளே ஊட்டப்பட்டது. இறுதியில், பிரபாகரன் இருக்கின்றார் என்பதில் தொடங்கிய புனைகதைகள் இறுதியில் அவரின் மகள் வருவார் என்னும் நிலைமைக்கு தாழ்ந்திருக்கின்றது.

இவ்வாறான கதைகள் தமிழ் சமூகத்தின் அரசியல் நிலைமையை முன்னோக்கி கொண்டு செல்ல ஒருபோதுமே பயன்படாது. தமிழர்களை மீட்பதற்கு எவரும் வெளியில் இருந்து வரப்போவதில்லை. ஒருவேளை, வடக்கு – கிழக்கில் வாழும் மக்கள் மத்தியிலிருந்து வரக்கூடும். இன்றைய அரசியல் சூழலை ஆழமாக புரிந்து கொண்டு – சூழ்நிலையை தந்திரத்தோடு அணுகக்கூடிய ஒரு தலைமை அல்லது அரசியல் இணக்கக் குழுவொன்று வெளித் தெரியும்போது சில மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

அவ்வாறில்லாது யாராவது வெளியிலிருந்து வருவாரென்று மக்களை நம்ப வைக்க முயற்சிப்பதும் அவ்வப்போது மக்களின் சிந்திக்கும் ஆற்றலை பரிகசிக்கும் நோக்கிலான செயல்களில் ஈடுபடுவதும் அடிப்படையிலேயே அரசியல் நேர்மையற்ற செயல்களாகும். இவ்வாறான நேர்மையற்ற அரசியல் செயல்களை கண்டிக்க வேண்டிய நமது புத்திஜீவிகளும், சிவில் சமூக பிரதிநிதிகளும், மதத் தலைவர்களும் ஏன் அமைதியாக இருக்கின்றனர்? ஏன் தாயக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மௌனமாக இருக்கின்றனர்?

போலியான அரசியல் செயல்பாடுகளால் ஒருபோதுமே தமிழ் சமூகத்தின் இன்றைய நிலைமையை மாற்றியமைக்கவே முடியாது. வரலாற்றில் வீழ்ச்சிகளை கண்ட சமூகங்கள் ஏராளம் – அதிலிருந்து மீண்டும் எழக்கூடிய வல்லமையை பெற்றவர்கள் அரிது. அவ்வாறான ஓர் அரிதான சமூகமாக ஈழத் தமிழ் சமூகம் நிமிர வேண்டுமாயின் மீட்பர்களுக்காகக் காத்திருப்பதை விடுத்துத் தங்களுக்குள் மீட்பர்களை உருவாக்க முயற்சிக்க வேண்டும்.

# ‘பதுமம்’ நிழ்ச்சியில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்த பாடல்!



*கொழும்பு, டிசெ. 06*

கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயத்தின் இந்து மன்றம், தமிழ் இலக்கிய மன்றம், நுண்கலை மன்றம் ஆகியன இணைந்து நடத்திய பதுமம் - 2023 நிகழ்ச்சி அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

கொழும்பு நெலும் பொக்குண மண்டபத்தில் நடந்த இந்த நிகழ்வில், சைவ மங்கையர் வித்தியாலய பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் மேடையை அலங்கரித்திருந்தன.

பதுமம் - 2023 ஆரம்ப நிகழ்வில் பொன்னியின் செல்வன் - 2 படத்தின் பாடலான ‘வீரா ராஜ வீரா’ பாடலை சைவ மங்கையர் வித்தியாலய மாணவிகள் வயலின், வீணை முதலான பாரம்பரிய இசை கருவிகள் சகிதம் பாடி அனைவரின் கவனத்தையும் ஈர்த்திருந்தனர்.

குறித்த இன்னியம் இசை நிகழ்ச்சியை சைவ மங்கையர் வித்தியாலய ஆசிரியர் நிவாஸினி சக்திவேல் நெறியாள்கை செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விழிப்புலனற்றோர் சங்கம் நடத்திய அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பு முடிவு

*யாழ்ப்பாணம், டிசெ. 06*

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் பன்முகப் பணிகளுக்காக நடத்திய அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பை நடத்தியிருந்தது. இதன் வெற்றியாளர்கள் தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊரெழு தனியார் மண்டபத்தில் நடத்தப்பட்டது.

இதில், முதலாம் பரிசான குளிர்சாதனப் பெட்டியை - 39769 என்ற இலக்க சீட்டு பெற்றுள்ளது. இரண்டாவது பரிசான மிக்சர் கிரைண்டரை 23045 என்ற இலக்க சீட்டும் மூன்றாவது பரிசான மின் விசிறியை 64570 என்ற இலக்க சீட்டும் பெற்றுள்ளது.

வெற்றியாளர்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்பாக அலுவலக நாட்களில் காலை 9.30 மணித தொடக்கம் பிற்பகல் 4 மணிக்குள் அதிர்ஷ்ட இலாப சீட்டுகளை கொண்டு வந்து உறுதிப்படுத்தி பரிசுகளை பெற்றுக்கொள்ளுமாறு யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் அறிவித்துள்ளது. (ஐ)

# மதுபோதையில் நீதிமன்றத்துக்கு வந்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு பிணை

*வடமராட்சி, டிசெ. 06*

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தின் வழக்கு விசாரணையில் மது போதையில் விசாரணைக்கு இடையூறு செய்த பொலிஸ் உத்தியோகத்தர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். கடந்த திங்கட்கிழமை நீதிமன்றத்துக்குள் வைத்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டார்.

மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் துன்னாலையை சேர்ந்த 33 வயதான பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தார்.

அவரின் சகோதரியின் மகன் மீது வழக்கு ஒன்று நிலுவையில் உள்ளது. அந்த இளைஞன் வெளிநாடு செல்வதற்காக நகர்த்தல் பத்திரத்தை தாக்கல் செய்திருந்தனர்.

அந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, குறித்த பொலிஸ் உத்தியோகத்தரும் நீதிமன்றத்துக்கு வந்து, பார்வையாளர் பகுதியில் அமர்ந்திருந்தார்.


இதன்போது, அவர் வைத்திருந்த திறப்பு ஒன்று கீழே விழுந்து அதிக சத்தம் எழுப்பியது. அருகில் நின்ற நீதிமன்ற உத்தியோகத்தர் ஒருவர் அங்கு சென்று குனிந்து திறப்பை எடுக்க முற்பட்ட போது, மது வாடை வீசியது.

இதையடுத்து அவரை அழைத்து விசாரித்தபோது அவர் பொலிஸ் உத்தியோகத்தர் என்பது தெரிய வந்தது. அவரை கைது செய்த பருத்தித்துறை பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தியபோது, அவரை நேற்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், நேற்று அவர் நீதிமன்றில் மீண்டும் முற்படுத்தப்பட்டார். மருத்துவ அறிக்கையிலும் அவர் மது அருந்தியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து, அவரை ஒரு இலட்சம் ரூபாய் பிணையில் விடுவித்த நீதிவான், 2024 பெப்ரவரி 22ஆம் திகதிக்கு வழக்கை ஒத்தி வைத்தார். (ஐ-02)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு

டிசெம்பர் - 06 புதக்கிழமை
சோபகிருது வருடம் - கார்த்திகை 20
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : நவமி




**மேடம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புதிய முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். சக ஊழியர்கள் உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**இடபம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். அமைதி நிலவும். உழைப்பால் உயரும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து முக்கிய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கடகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மனம் புரியாத கவலைகள் பயம் வந்து போகும். வியாபாரத்தில் பணம் தாமதமாக வரும். அதிகாரிகளை பகைத்துக் கொள்ள வேண்டாம். கவனம் தேவைப்படும்.

**கன்னி**
எளிதில் முடித்துவிடலாம் என்ற காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**துலாம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உங்கள் கை ஓங்கும். சாதிக்கும் நாள்.

**விருச்சிகம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். உறவினர்களின் பலவீனத்தை உணருவீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். கனவு நனவாகும் நாள்.

**தனுசு**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார். நன்மை நடக்கும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் அடுக்கடுக்கான வேலைகளால் அவதிக்கு உள்ளாவீர்கள். உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
கடினமான வேலைகளை மாறுபட்ட அணுகுமுறையால் சாதித்துக் காட்டுவீர்கள். தாயாரின் உடல் நிலை சீராகும். உத்தியோகத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

# வெள்ளப் பாதிப்பு நிவாரணம் ரூ. 5 ஆயிரம் கோடி தர வேண்டும்!

## மத்திய அரசிடம் தமிழக அரசு கோரிக்கை

புதுடில்லி, டிசெ. 06

**சென்னை மற்றும் சில மாவட்டங்களில் தீவிர மழையால் பெரும் பாதிப்பைச் சந்தித்துவரும் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்கும், பெரிய சேதங்களை சரிசெய்வதற்கும் தமிழ்நாட்டுக்கு ரூ. 5000 கோடி இடைக்கால நிவாரணம் வழங்குமாறு மத்திய அரசுக்கு கோரிக்கை யிடப்பட்டுள்ளது.**

இதுகுறித்து மாநிலங்களவையில் பேசிய திருச்சி சிவா, தமிழ்நாடு முதல்வர் மு. க. ஸ்டாலினுடன் மொத்த அமைச்சரவையும், நகராட்சி அதிகாரிகள், தீயணைப்பு வீரர்கள், துப்புரவு பணியாளர்கள், மின்வாரிய ஊழியர்கள் மற்றும் மீட்புப் படையினருடன் தீவிரமாக மீட்புப்பணிகள் நடந்துவருவதாகக் கூறியுள்ளார்.

அரசு நிவாரண பணிகளை தீவிரப்படுத்தியுள்ள நிலையில், பெரிய உள்கட்டமைப்பு பாதிப்புகளை சரிசெய்ய காலம் தேவைப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும், இடைக்கால நிவாரண உதவியாக 5000 கோடி ரூபாயை தமிழக அரசு கோரியுள்ளதாகக் கூறினார். மத்திய அரசு தமிழ்நாட்டின் அவசர நிலையைக் கருத்தில் கொண்டு ஆரம்ப கால நிவாரணத் தொகையாக ரூ. 5000 கோடியை உடனே மாநிலத்திற்கு வழங்கி வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

# ஜெயலலிதா நினைவுதினம் அ. தி. மு. கவினர் அஞ்சலி!



சென்னை, டிசெ. 06

மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் 7ஆம் ஆண்டு நினைவு தினமான நேற்று சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அவரின் நினைவிடத்தில் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்டோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வின்போது, அ. தி. மு. க. மூத்த நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அக்கட்சியைச் சேர்ந்த ஏராளமான தொண்டர்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். பின்னர் உறுதி ஏற்பு நிகழ்வும் நடைபெற்றது.

முன்னதாக, இதுதொடர்பாக தனது எக்ஸ் வலைதளத் தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

“எல்லோரும் எல்லாமும் பெற எந்நாளும் உழைத்த, ஒப்பாரும் மிக்காரும் இல்லாத மாபெரும் அரசியல் ஆளுமை, நம் அனைவருக்கும் தலைவியாய் வாழ்ந்து, என்றென்றைக்கும் வழிகாட்டியாய்த் திகழும் மறைந்த முதல்வர் ஜெயலலிதாவை அவர்தம் நினைவு நாளில் போற்றி வணங்குகிறேன். மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் 7ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி, மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்ட அவரது திருவுருவ படத்துக்கு, சென்னை பசுமை வழிச் சாலையில் உள்ள செவ்வந்தி இல்லத்தில் இன்று (நேற்று) மலர் தூவி மரியாதை செலுத்தினேன்.

அவரின் வழியில் மக்களால், மக்களுக்காக என்றென்றும் பயணிப்போம். ஜெயலலிதாவின் நூற்றாண்டு கனவை நெஞ்சில் நிலைநிறுத்தி, மக்களுக்கான ஒரே இயக்கம் அ. இ. அ. தி. மு. க. என்பதை நம் செயலில் உறுதிப்படுத்தி, மக்கள் பணியே மகேசன் பணியாய் கொண்டு அயராது உழைப்போம்” என்று அவர் பதிவிட்டுள்ளார். (ஐ)

# சசிகலா நீக்கம் செல்லுபடியாகும்!

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு

சென்னை, டிசெ. 06

2016இல் மீண்டும் முதலமைச்சராகப் பதவியேற்ற அ. தி. மு. க பொதுச்செயலாளர் ஜெயலலிதா, அதே ஆண்டு டிசெம்பர் 5ஆம் திகதி உடல்நலக் குறைவால் மரணமார்.

இதைத் தொடர்ந்து, அ. தி. மு. க பொதுக்குழுக் கூட்டத்தில் கட்சியின் பொதுச்செயலாளராக சசிகலா தெரிவு செய்யப்பட்டார். அதே சமயம், சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டனை உறுதிசெய்யப்பட்டு, நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனைக்கு உள்ளான சசிகலா பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

அவர் சிறைக்கு சென்ற அடுத்த ஆண்டு, மீண்டும் அ. தி. மு. க. பொதுக்குழுக் கூட்டம் நடத்தப்பட்டு, கட்சியிலிருந்து சசிகலாவை நீக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அதையடுத்து, அ. தி. மு. க-வின் விதிகளில் மாற்றம் கொண்டுவரப்பட்டு, கட்சியின் ஒருங்கிணைப்பாளராக ஓ. பன்னீர்செல்வமும் இணை ஒருங்கிணைப்பாளராக எடப்பாடி பழனிசாமியும் தெரிவாகினர்.

இந்த முடிவை இந்திய தேர்தல் ஆணையமும் ஏற்றுக்கொண்டது. பின்னர், நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை முடிந்து வெளியே வந்த சசிகலா, ஹஅ.தி.மு.க-விலிருந்து என்னை நீக்கியது செல்லாது' என அ.தி.மு.க-வின் பொதுக்குழு தீர்மானத்தை எதிர்த்து சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அதைத் தொடர்ந்து சசிகலாவின் மனுவை நிராகரிக்குமாறு ஓ. பன்னீர்செல்வமும் எடப்பாடி பழனிசாமியும் மனு தாக்கல் செய்தனர். இருவரின் கோரிக்கையை ஏற்ற நீதிமன்றம், கடந்த ஆண்டு ஏப்ரலில், சசிகலாவின் மனுவை நிராகரித்து தள்ளுபடி செய்தது.

இந்த முடிவை எதிர்த்த சசிகலா, சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். இதனை விசாரித்த உயர் நீதிமன்றம் அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட பிறகு திகதி குறிப்பிடாமல் தீர்ப்பை ஒத்திவைத்தது. இதுவொருபக்கம் நடக்க, அ.தி.மு.க-வில் ஒற்றைத் தலைமை விவகாரம் வெடித்து, இறுதியில் ஓ.பன்னீர்செல்வமும், அவரின் ஆதரவாளர்களும் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தே நீக்கப்பட, அ.தி.மு.க விதிகளில் மீண்டும் மாற்றம் கொண்டுவரப்பட்டு கட்சியின் பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி தெரிவானார்.

தற்போது, இந்திய தேர்தல் ஆணையத்தின் அதிகாரபூர்வ கோப்புகளில் அ.தி.மு.க-வின் பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமியே இருக்கிறார். இந்த நிலையில் சசிகலாவின் மேல்முறையீட்டு மனுவை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து, ஹஅ.தி.மு.க-விலிருந்து சசிகலாவை நீக்கியது செல்லும்' என்பதை உறுதிசெய்திருக்கிறது. (ஐ)

# வடக்கு, கிழக்கில் முப்படை ஊடாகவே போதைப்பொருள் பாவனை ஊக்குவிப்பு!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றச்சாட்டு



**கொழும்பு, டிசெ. 06**

**வடக்கு-கிழக்கில் முப்படைகள் ஊடாகவே திட்டமிட்ட வகையில் போதைப்பொருள் பாவனை ஊக்குவிக்கப்படுவதாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள்ளார்.**

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்தல்கள் அமைச்சு விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சுக்கள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு-கிழக்கைப் பொறுத்தவரையில் வழிகாட்டலும் ஆலோசனையும் என்பது மிக முக்கியமானது வடக்கு கிழக்கில் போதைக்கு அடிமையாதல் என்பது, மிகப் பெரும் பிரச்னையாக உருவாகிவருகின்றது.

ஏனென்றால்-சிறிலங்கா அரசானது இன்னும் ஆயுதக் கிளர்ச்சியை தோற்கடிக்கும் மனோநிலையில்தான் ஓடிக் கொண்டிருக்கிறது.

இதனால் முப்படைகள் ஊடாகவே இந்த போதைப் பொருள் பாவனை ஊக்குவிக் கப்படுகின்றது.

அரசாங்கம் மற்றும் இராணுவத்தினரின் முழு ஒத்துழைப்புடனேயே இவை நடைபெறுகின்றன. இராணுவம் தான் நோரடியாகவே அந்த செயற்பாட்டை செய்துவருகின்றது.

இப்படியான ஒரு சூழலில் வடக்கு-கிழக்கில் மிகப்பெரும் அளவிலான இளைஞர்கள் போதைவஸ்துக்கு அடிமையாக் கப்பட்டு மோசமான நிலைமைக்கு தள்ளப்படுகின்றார்கள்.

எனவே பாடசாலைகளில் உளவள செயற்பாடுகள் மிக முக்கியமானதாகும். பாதிக்கப்படுபவர்களை ஏதோ ஒரு வழியில் அதிலிருந்து மீட்கவேண்டுமாயின் இத்தகைய உளவள செயற்பாடுகள் முக்கியமானதாக இருக்க வேண்டும்.

மாணவர்கள் பிரச்னைகளிலிருந்து விடுபடுவதற்குரிய மனோநிலையை உருவாக்கி, அவர்களை நற்பிரஜைகளாக்குவதை விடுத்து, மாறாக அவர்களை குற்றவாளிகளாக்கி சமூகத்திலிருந்து அவர்களை ஒதுக்கும் நிலைமையையே உருவாக்கியிருக்கிறது-என்றார்.

(அ)

# கொலையில் முடிந்த ஹோட்டல் விருந்து!

கொழும்பு, டிசெ. 06

ஜா-எல பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்று முன் தினம் இடம்பெற்ற விருந்தின் போது இடம்பெற்ற வாக்குவாதம் நீடித்ததில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தும்பேலிய, ஜா-எல பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையவராவார்.

உயிரிழந்த நபருக்கும் மற்றொரு நபருக்கும் விருந்தின் போது வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது, சந்தேகநபர் அவரை தாக்கி பின்னர் நீச்சல் குளத்தில் தள்ளியுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதுடன், அவரை கைது செய்வதற்கான விசாரணைகளை ஜா-எல பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# ஆசிரியையால் தாக்கப்பட்ட சிறுவனுக்கு சத்திர சிகிச்சை!

யாழ்ப்பாணம், டிசெ. 06

யாழில் ஆசிரியையின் தாக்குதலுக்கு இலக்கான 4 ஆம் தர மாணவனின் நகம் சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த மாணவன் அப்பியாசக் கொப்பியில் ஒழுங்காக எழுதவில்லை என ஆசிரியை, மாணவனின் கையில் அடித்துள்ள நிலையிலேயே மாணவனின் விரல் நகம் சிதைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்ட நிலையில் அவரது நகம் சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் அம்மாணவனின் பெற்றோர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# ரணில் - ஜோன் கெரி சந்திப்பு

கொழும்பு, டிசெ. 06

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் காலநிலை மாற்றம் தொடர்பான விசேட பிரதிநிதி ஜோன் கெரிக்கும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது நவீன முன்னெடுப்புகள் மூலம் காலநிலை மாற்றத்திற்கு எதிராகப் போராடுவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இலங்கையில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக் கழகத்தின் செயற்பாடுகள் மற்றும் காலநிலை சவால்களுக்கு நிலையான தீர்வுகளை அமுல்படுத்த இலங்கை தயாரித்துள்ள விரிவான திட்டம் குறித்தும் இங்கு ஜனாதிபதி விளக்கினார்.

காலநிலை மாற்றத்தை திறம்படக் கையாள்வதற்குத் தேவையான நிதி திரட்டல் பிரச்சினை குறித்தும் நிதி மூலங்களை மேம்படுத்துவதில் தனியார் துறையின் பங்களிப்பு இன்றியமையாதது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் இலங்கையின் அர்ப்பணிப்பு மற்றும் அதற்காக ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டங்கள் ஆகியவற்றை நேரில் காண விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஜோன் கெரிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்தார்.

# குறைவடைந்து செல்லும் இலங்கை ஏற்றுமதி வீதம்!

கொழும்பு, டிசெ. 06

2022 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில், 2023 ஒக்ரோபரில் இலங்கையின் ஏற்றுமதி 14.6 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பெறுமதியின் அடிப்படையில் 898.0 மில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

மேலும், செப்ரெம்பர் 2023 இல் பதிவு செய்யப்பட்ட மதிப்புடன் ஒப்பிடும்போது இது 13.13 வீதக் குறைவு எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக ஆடை, இறப்பர், இறப்பர் சார்ந்த பொருட்கள், தேங்காய் மற்றும் தேங்காய் சார்ந்த பொருட்களில் ஏற்றுமதி தேவை குறைவதால் பொருட்களின் ஏற்றுமதியில் சரிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, உணவு மற்றும் பானங்களின் ஏற்றுமதி வருவாய் 2023 ஒக்ரோபரில் 20.77வீதம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

2022 ஒக்ரோபருடன் ஒப்பிடுகையில், 2023 ஒக்ரோபரில் கடல் உணவுகளின் ஏற்றுமதி வருவாய் 3.73 வீதம் அதிகரித்து 20.29 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது.

மேலும், அலங்கார மீன்களின் ஏற்றுமதி வருமானம் ஒக்ரோபர் 2022 உடன் ஒப்பிடும் போது 2023 ஒக்ரோபரில் 35.71வீதம் அதிகரித்து 2.47 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# பாடசாலை தரங்களை 13 இலிருந்து 12 ஆகக் குறைப்பதற்கு முன்மொழிவு!

கொழும்பு, டிசெ. 06

பாடசாலை தரங்களின் எண்ணிக்கையை 13 இல் இருந்து 12 ஆகக் குறைப்பதற்கு முன்மொழியப்பட்டிருப்பதாக உத்தேச புதிய கல்வி மறுசீரமைப்பை வெளியிட்டு கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் சபை முதல்வர் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 2023ஆம் ஆண்டில் கல்வி அமைச்சின் வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் முன்னேற்றங்கள் மற்றும் 2024ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

அதன்படி, உத்தேச புதிய கல்வி சீர்திருத்தங்கள் மூலம், ஒவ்வொரு குழந்தையும் 17 ஆண்டுகளில் பாடசாலைப் படிப்பை முடிக்க வாய்ப்பு வழங்கப்படும் என்று கல்வி அதிகாரிகள் தெரிவித்தனர்.


நான்கு வயதில் முன்பள்ளியும், ஆரம்பப் பிரிவு 1 முதல் 5ஆம் தரம் வரையிலும், கனிஷ்ட பிரிவு தரம் 6 முதல் தரம் 8 வரையிலும், சிரேஷ்ட பிரிவு தரம் 9 முதல் தரம் 12 வரையிலும் வகைப்படுத்தப்படவிருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குப் பாடசாலை அடிப்படையிலான மதிப்பீட்டிற்கு குறிப்பிட்ட சதவீதத்தையும், பரீட்சையின் ஊடாகக் குறிப்பிட்ட சதவீதத்தை வழங்குவதற்கும் முன்மொழியப்பட்டுள்ள நிலையில், புலமைப்பரிசில் பரீட்சையை இலகுவாக்கி போட்டியை நீக்குவதற்கும் கல்வி அமைச்சு முன்மொழிந்துள்ளது.

மேலும், உத்தேச புதிய கல்விச் சீர்திருத்தங்கள் மூலம், 10ஆம் ஆண்டில் சாதாரணதரப் பரீட்சையையும், 12ஆம் ஆண்டில் உயர்தரப் பரீட்சையையும் நடத்த கல்வி அமைச்சு முன்மொழிந்துள்ளது. சாதாரணதரப் பரீட்சைக்கான பாடங்களின் எண்ணிக்கையை 9ல் இருந்து 7 ஆக குறைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த 7 பாடங்களில், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், தொழில்நுட்ப மற்றும் துறை சார் திறன்கள், மத மற்றும் விழுமியங்கள் போன்ற புதிய மூன்று பாடங்களை மேலதிக பாடங்களாகக் கற்பது கட்டாயப்படுத்தப்பட விருப்பது பற்றிய முன்மொழிவும் உள்ளடக்கப்பட்டிருப்பதாகக் கல்வி அமைச்சின் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

(அ)

# புதுமுறிப்பு குளத்திலிருந்து மீன்கள் வெளியேறாதவாறு தடுப்பு வலை!



கிளிநொச்சி, டிசெ. 06

வான்பாயும்போது குளத்திலிருந்து மீன்கள் வெளியேறாமல் தடுக்கும் வகையில் தடுப்பு வலைகள் அமைக்கும் பணிகள் புதுமுறிப்புக் குளத்தில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

ஒவ்வொரு வருடமும் பருவ மழைக்கு குளம் நிரம்பி வான் பாயும் போதும் பெருமளவு மீன்கள் குளத்திலிருந்து வெளியேறி விடுகின்றன. இதன்காரணமாக நன்னீர் மீன் பிடி தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தமையினை கருத்தில் எடுத்து வான்கட்டு பகுதியில் தடுப்பு வலைகள் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கிளிநொச்சி பிராந்திய தேசிய நீர் உயிரினச் செய்கை அதிகார சபையின் பணிப்பாளர் குமார குலசிங்கம் சங்கீதன் மற்றும் அவர்களது குழுவினர், புதுமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் இணைந்து இப் பணியை மேற்கொண்டனர்.

(அ)

# தெல்லிப்பழை வாள்வெட்டு; தீவிர விசாரணை ஆரம்பம்!

யாழ்ப்பாணம், டிசெ. 06

**தெல்லிப்பழை பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன், தொடர்புடைய குழுவினரை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**

குறித்த பகுதியில் பொருத்தப்பட்டுள்ள சீ.சி.ரீ.வி காணொளிகளை அடிப்படையாக கொண்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களை கைது செய்வதற்காக, பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினர் தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

தெல்லிப்பழை பகுதியில், நேற்று முன் தினம் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதேநேரம், இந்த சம்பவத்தின்போது, துப்பாக்கி பிரயோகமும் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வான் ஒன்றில் பிரவேசித்த குழுவொன்று குறித்த தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

காயமடைந்தவர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

# நாட்டில் வேலை நிறுத்தங்களினால் இழக்கப்பட்ட 17,095 மனித நாட்கள்!

கொழும்பு, டிசெ. 06

2022 ஆம் ஆண்டில் தொழில் பிரச்னைகள் வேலைநிறுத்தமாக அதிகரித்ததன் காரணமாக பதினேழாயிரத்து தொண்ணூற்றைந்து (17,095) மனித நாட்கள் இழக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான தொழிலாளர்துறையின் செயல்திறன் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஆண்டில், 22 வேலை நிறுத்தங்கள் பதிவு செய்யப்பட்டன, அவற்றில் 5,558 தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

மேலும், மாவட்ட மற்றும் துணைத் தொழிலாளர் அலுவலகங்களின் தொழிலாளர் அலுவலர்கள் 79,700 தொழிலாளர் ஆய்வுகளையும், பெண்களின் இரவுப் பணி தொடர்பான பணி நிலைமைகள் குறித்து 193 ஆய்வுகளையும், குழந்தைத் தொழிலாளர் குறித்து 193 ஆய்வுகளையும் கடந்த ஆண்டு தொழிலாளர் துறை நடத்தியது. தொழில்துறை பாதுகாப்பு பிரிவு 4,600 தொழிற்சாலை ஆய்வுகள் மற்றும் விபத்து விசாரணைகளை நடத்தியது மற்றும் தொழில்சார் பாதுகாப்பு பிரிவு 1,583 உயிரியல் ஆய்வுகள் மற்றும் தொழில்துறை ஆய்வுகளை நடத்தியதன் பின் இந்த தகவல் கிடைக்கப்பற்றுள்ளது. (அ)

# பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகாத மாணவர்களுக்கும் உயர்கல்வித் தெரிவு

## சபையில் வலியுறுத்தினார் சஜித்

கொழும்பு, டிசெ. 06

இலவசக் கல்வியை நவீனத்துவப்படுத்தி, பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகாத மாணவர்களுக்கும் உயர்த்தரக் கல்விக்கான தெரிவை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது நாட்டின் கல்வியானது, புரட்சிகரமான மாற்றத்தை நோக்கி பயணிக்க வேண்டும்.

50 களில் இருந்த சிங்களம் மட்டும்தான் என்றக் கொள்கையுடன், எம்மால் நாடு என்ற ரீதியில் தற்போது முன்னோக்கி நகர முடியாது.

எல்லைகளை வகுத்துக் கொண்டு பயணிக்கும் பயணத்தினால் நாட்டுக்கு சௌபாக்கியமான எதிர்க்காலம் கிடைக்காது.

சிங்கள மொழியுடன், ஏனைய மொழிகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

விசேடமாக ஆங்கில மொழி மூலமான கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய காலக் கட்டத்தில் நாம் உள்ளோம்.

க.பொ.த. சாதாரணத் தரப்பரீட்சைக்கு பின்னர் அல்லது அதற்கு முன்னர் பாடசாலைகளை விட்டு வெளியேறும் மாணவர்கள் தொழிற்கல்வியை எதிர்ப்பார்க்கிறார்கள்.

எனினும், தொழில்நுட்பக் கல்வி முறைமையானது நாட்டில் வீழ்ச்சியடைந்துள்ளது.

2 இலட்சத்து 50 ஆயிரம் பேர் உயர்த்தரப் பரீட்சைக்கு முகம் கொடுத்து, அதில் 15-20 வீதமானவர்கள் மட்டும்தான் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படுகிறார்கள்.

ஏனைய 7-8 வீதமானவர்கள் தனியார் பல்கலைக்கழகங்களில் சேர்கிறார்கள்.

எனினும், எஞ்சியுள்ள 70 வீதமான மாணவர்களுக்கு பட்டப் படிப்பை தொடர முடியாத நிலைமை காணப்படுகிறது.

இதனை நிவர்த்தி செய்ய வேண்டுமெனில், நாம் இலவசக் கல்வியை நவீனத்துவப்படுத்த வேண்டும்.

இதன் ஊடாக பல்கலைக்கழகத்திற்குள் செல்ல முடியாத 70 வீதமானோருக்கு உயர்க்கல்வியைத் தொடர்வதற்கான தெரிவை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்-என்றார்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தினால் வன்னியில் பல்வேறு உதவிகள்

வடமராட்சி,டிசெ. 06

வடமராட்சி சந்நிதியான் ஆச்சிரமத்தால் வன்னி பகுதியிலும் நேற்று பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளம் பனிக்கன்குளம் கிராமத்தில் வசிக்கும் குடும்பம் ஒன்றுக்கு அவர்கள் வசித்த வீட்டை திருத்தம் செய்வதற்காக ரூபா 150,000 வழங்கப்பட்டுள்ளது.

வற்றாப்பளை பிரதேசத்தை சேர்ந்த பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்ற மாணவி ஒருத்திக்கு அவரது அடிப்படை செலவுகளுக்காக ரூபாய் 50,000 நிதியும், வவுனியா - புதியகற்பகபுரம் பிரதேசத்தை சேர்ந்த விசேட தேவைக்குட்பட்ட நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தில் சாதாரண தரத்தில் கல்வி கற்று சித்தியடைந்த மாணவிக்கு ரூபா 47,500 பெறுமதியான துவிச்சக்கர வண்டியும் வழங்கப்பட்டன.

வவுனியா - ஈச்சங்குளம், கோதண்டர் நொச்சிக்குளம் பிரதேசத்தை சேர்ந்த இரண்டு கண்கள் பார்வையற்ற குடும்பத்தை சேர்ந்த நொச்சிக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தரம்- 09 இல் கல்வி கற்கும் மாணவிக்கு 47,500 ரூபா பெறுமதியான துவிச்சக்கர வண்டி ஒன்றும் வழங்கப்பட்டது.



வவுனியா வடக்கு வலயத்தை சேர்ந்த பூம்புகார் கண்ணகி வித்தியாலயத்தில் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு அவர்களை கௌரவிப்பதற்காக ரூபா 81,000 நிதியும் வழங்கப்பட்டது.

இவ்வுதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கினார். (அ-02)

# 35 வீட்டுப் பணியாளர்கள் இலைங்கைக்கு நாடு கடத்தல்!

கொழும்பு, டிசெ. 06

இலங்கைக்கு வரமுடியாமல் குவைத்தில் நீண்ட காலமாக விஸா இன்றி சட்டவிரோதமாக தங்கியிருந்த 35 இலங்கை வீட்டுப் பணியாளர்கள் குவைத்திலிருந்து நாடு கடத்தப்பட்டு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இக்குழுவினர் நேற்று முன் தினம் காலை 06.35 மணியளவில் குவைத் விமான நிலையத்தில் இருந்து, ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகை தந்தனர்.

ஒரு ஆண் வீட்டுப் பணியாளரும், 34 வீட்டுப் பெண் பணியாளர்களும் இக்குழுவில் அடங்குகின்றனர்.

குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகம், உள்விவகார அமைச்சு, குடிவரவுத் திணைக்களம், நீதி அமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சு ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் இந்த வீட்டுப் பணியாளர்களை இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி, வீட்டுப் பணியாளர்களுக்கு எதிரான வழக்குகள் தீர்க்கப்பட்டு, தற்காலிக கடவுச் சீட்டுகள் தயாரிக்கப்பட்டு, விமான பயணச் சீட்டுக்கள் வழங்கப்பட்டு, அவர்களுக்கு சம்பளம் மற்றும் பிற சலுகைகளை திரும்பப் பெறுவதற்கான வாய்ப்பை இலங்கை தூதரகம் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# ஷானி அபேசேகரவை விபத்தில் கொலை செய்யச் சதித் திட்டம்!

கொழும்பு, டிசெ. 06

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவை முன்கூட்டியே வாகன விபத்தில் கொலை செய்ய சதித் திட்டம் தீட்டப்பட்டதாக சட்டமா அதிபர் நேற்று முன் தினம் மேன்முறையீட்டு நீதிமன்றில் அறிவித்தார்.

தனக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படாமைக்கு எதிராக அபேசேகரவினால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோதே, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ரொஹந்த அபேசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீதிமன்றத்தின் முந்தைய உத்தரவின் பிரகாரம், பாதிக்கப்பட்ட மற்றும் சாட்சிகள் பாதுகாப்பு அதிகாரசபையின் புலனாய்வுப் பிரிவு அபேசேகரவின் பாதுகாப்பு தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையை தயாரித்துள்ளதாக ரொஹந்த அபேசூரிய தெரிவித்துள்ளார்.

முன்னதாக ஏற்பாடு செய்யப்பட்ட வாகன விபத்தில் ஷானி அபேசேகரவை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டதாக அந்த அறிக்கையில் தெரியவந்துள்ளதாக ரொஹந்த அபேசூரிய கூறினார்.

மனுதாரர் ஷானி அபேசேகரவுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படவேண்டுமென நீதிமன்றில் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஷானி அபேசேகரவுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் பாதுகாப்பிற்கு மேலதிகமாக மேலதிக அதிகாரிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கு முன்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

ஷானி அபேசேகரவுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ள பொலிஸ் பாதுகாப்பு போதுமானதாக இல்லை என ஷானி அபேசேகர சார்பில் ஆஜரான சட்டத்தரணி உபுல் ஜயசூரிய தெரிவித்தார்.

உண்மைகளை பரிசீலித்த பெஞ்ச், இந்த கோரிக்கை தொடர்பாக உரிய உத்தரவை பிறப்பிக்க டிசெம்பர் 14ஆம் திகதி வழக்கை மீண்டும் அழைக்க முடிவு செய்தது. (அ)

# புலம்பெயர்ந்த மக்களின் காணிகள் வவுனியா மாவட்டத்தில் அபகரிப்பு!

## உடனடி நடவடிக்கை எடுக்க கோரிக்கை

வவுனியா, டிசெ. 06

**யுத்த சூழலில் வவுனியா மாவட்டத்திலிருந்து புலம்பெயர் மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுவதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.**

வவுனியா ஓமந்தை மற்றும் பன்றிக்கெய்தகுளம் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் புலம்பெயர்ந்தது வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் குறித்த காணிகளை அரசியல் வாதி ஒருவரின் ஆதரவாளர்கள் அபரித்துகொண்டு, பிரிதொரு தரப்பினருக்கு வழங்கப்படுவதாகவும் குறித்த பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த காணிகள் நீண்ட காலமாக புலம்பெயர்ந்து வாழும் மக்களின் உறவுகளினால் பராமரிக்கப்பட்டு வந்தன. இருப்பினும் உள்ளூர் வாசிகளார் காணிகளை பராமரிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாகவே அரசியல் பின்புலம் கொண்ட சிலர் அடாவடித்தனமாக காணிகளை சுபீகரித்துக்கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் பிரதேச செயலகம் உரிய நடவடிக்கைகளை எடுக்கப்படவேண்டும் எனவும், இல்லையேல் இது மீண்டும் சமூக விரிசலுக்கு ஏதுவான காரணியாக மாறுவதோடு, சமூக பிரச்னைகளையும் ஏற்படுத்தும் என பிரேதச மக்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# கிரிக்கெட் சபைக்கு இடைக்கால நிர்வாகம்: மனு மீதான விசாரணை 13ஆம் திகதி

கொழும்பு, டிசெ. 06

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு இடைக்கால நிர்வாகத்தை நியமிப்பதற்கு முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க எடுத்த தீர்மானத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை எதிர்வரும் 13 ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, புதிய விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ சார்பில் ஆஜரான சட்டத்தரணி, இதனுடன் சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் தமது கட்சிக்காரரின் நிலைப்பாட்டை அறிவிப்பதற்கு கால அவகாசம் தேவை என நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

அதன்படி வழக்கு விசாரணை இம்மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் அன்றைய தினம் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என புதிய விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ நீதிமன்றத்துக்கு உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# உலக மண் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் சிரமதான பணி

கிளிநொச்சி, டிசெ. 06

உலகம் முழுவதும் ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் 5ஆம் திகதி "உலக மண் தினம்" கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில், உலக மண் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி நகர் பகுதியில் சிரமதான நிகழ்வு நேற்றுக் காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலகம், கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி திணைக்களம், கரைச்சி பிரதேச சபை ஆகியன இணைந்து கிளிநொச்சி நகரின் பிரதான வீதியோரங்களிலுள்ள பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றும் பணியை முன்னெடுத்திருந்தன.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் குறித்த சிரமதான நிகழ்வு நடைபெற்றது.

இதனூடாக கரைச்சி பிரதேச சபை முன்றலில் இருந்து கிளிநொச்சி டிப்போ சந்தியின் ஏ-9 வீதியின் இரு பக்கங்களும் தூய்மையாக்கப்பட்டன.

இதன்போது குறித்த பகுதிகளில் காணப்பட்ட பெருமளவான பொலீத்தீன், பிளாஸ்ரிக் பொருட்கள் மற்றும் பாதீனிய செடிகள் அகற்றப்பட்டன. (அ)

# அம்பேவெல தொழிற்சாலைக்கு டீசல் வழங்கலில் பெரும் மோசடி

கொழும்பு, டிசெ. 06

மில்கோ நிறுவனத்திற்குச் சொந்தமான அம்பேவெல தொழிற்சாலைக்காக பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் கடந்த எட்டு ஆண்டுகளில் வழங்கப்பட்ட டீசல் மில்கோ தொழிற்சாலையின் எண்ணெய் தொட்டிகளுக்கு இறக்கப்படவில்லை என்று தேசிய தணிக்கை அலுவலகம் கூறுகிறது.

அதன்படி, ஒரு கோடியே 72 இலட்சத்து ஒன்பதாயிரத்து நானூற்று அறுபத்தேழு ரூபா பெறுமதியான 165,300 லீற்றர் டீசல் மில்கோ தொழிற்சாலையின் எண்ணெய் தொட்டிகளுக்கு இறக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 6 வருடங்களில் (2017- 2022) 9,364,835 ரூபா பெறுமதியான 92,400 லீற்றர் டீசலை ஏற்றிச் சென்ற 14 பவுசர் வாகனங்கள் தொழிற்சாலைக்கு வராதபோதிலும், எரிபொருளுக்கான கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், குறிப்பிட்ட எரிபொருள் இருப்புக்களுக்கான விலைப்பட்டியல்களில் காட்டப்பட்டுள்ள கையொப்பங்கள் பாதுகாப்புத் துறை அதிகாரிகளின் கையொப்பங்களுடன் ஒப்பிட முடியாதவை என தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எரிபொருள் இருப்பு பெறும் பாதுகாப்புப் பிரிவின் ஆவணங்களை ஆய்வு செய்தபோது இந்த தகவல் தெரியவந்துள்ளதாக கடந்த 3ஆம் திகதி வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும், அம்பேவெல பால் தொழிற்சாலையின் ஜெனரேட்டருக்கான டீசல் தாங்கிகளில் இருந்து வெளியேறும்போது 58,703 லீற்றர் டீசல் தவறியுள்ளதாக கணக்காய்வு அறிக்கையில் தெரியவந்துள்ளது.

கணக்காய்வு அறிக்கையின்படி, எரிபொருள் கொள்வனவு மற்றும் விடுவிப்பில் இடம்பெற்ற மோசடிகள் காரணமாக அம்பேவெல பால் தொழிற்சாலையின் உள்ளகக் கட்டுப்பாடு மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் முறைகேட்டில் ஈடுபடும் தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும் என்றும் கணக்காய்வு பரிந்துரை செய்துள்ளது.

அறிக்கையின் மூலம் தெரியவந்த உண்மைகளின்படி இதற்குக் காரணமான அதிகாரிகள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும், மேலதிக ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக நிறுவனத்தின் நிர்வாகம் கணக்காய்வுக்கு குறிப்பிட்டுள்ளது. (அ)

# மகிந்த, கோட்டாபய, பஸில் மீது நட்டஈடு கோரி வழக்கு தாக்கல்?

கொழும்பு, டிசெ. 06

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர்களான மகிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ உள்ளிட்டோர் பொறுப்பு என உயர் நீதிமன்ற தீர்ப்பின்படி, அகில இலங்கை நுகர்வோர் சங்கம் எதிர்காலத்தில் நட்டஈடு தொடர்பான வழக்குகளை தாக்கல் செய்யவுள்ளது.

அப்போதைய நிர்வாகமும் அதிகாரிகளும் எடுத்த தவறான பொருளாதார முடிவுகளால் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக சட்ட வல்லுநர்கள் ஏற்கனவே கருத்து தெரிவித்துள்ள நிலையில், அதன்படி அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அகில இலங்கை நுகர்வோர் சங்கத்தின் செயலாளர் மிலிந்த பிரேமரத்ன கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும், தெரிவிக்கையில்-

இந்த வழக்குகளை சிவில் வணிக நீதிமன்றம் அல்லது மாவட்ட நீதிமன்றத்துக்கு ஒதுக்கலாம் என்று சட்ட ஆலோசனை கிடைத்துள்ளது.

முன்னைய ஆட்சிக் காலத்தில் எரிவாயு வெடிப்பு உட்பட பல்வேறு துறைகளில் பல பொருளாதார குற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

அவற்றிற்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் எத்தகைய பலனையும் தரவில்லை-என்றார். (அ)

# ஐந்து ஆண்டுகளில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோரின் ஓய்வூதியம் நிறுத்தம்

கொழும்பு, டிசெ. 06

கடந்த ஐந்து ஆண்டுகளில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரின் ஓய்வூதியத்தொகை பல்வேறு காரணங்களுக்காக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

தகவல் அறியும் சட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட விசாரணையின் போதே ஓய்வூதிய திணைக்களம் இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

இதன்படி, குறித்த ஐந்து ஆண்டுகளில் 53,813 பேரின் ஓய்வூதியத் தொகை ஓய்வூதிய திணைக்களத்தினால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலானோரின் ஓய்வூதியம் இந்த ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த எட்டு மாதங்களில் 14,742 பேரின் ஓய்வூதியம் நிறுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று, 2018 ஆம் ஆண்டில் 5454 பேரும், 2019 ஆம் ஆண்டில் 5570 பேரும், 2020 ஆம் ஆண்டில் 6155 பேரும், 2021 ஆம் ஆண்டில் 8949 பேரும், 2022 ஆம் ஆண்டில் 12,943 பேரும் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

ஓய்வூதியம் தற்காலிகமாக இடைநிறுத்தம், மறுமணம், வசிப்பிடத்தை உறுதிப்படுத்தாமை, பாதுகாவலர் மாற்றம், உள் தணிக்கை அறிவிப்பின் பேரில், சார்புடையவர்களை மாற்றுதல், மீண்டும் பணிக்கமர்த்தல், அதிக பணம் செலுத்துதல், விளக்கமறியல், நேர்காணலுக்கு சமூகமளிக்காமை, ஆயுள் சான்றிதழ் பெறாமை, ஆவணங்களில் உள்ள குறைபாடுகள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் ஓய்வூதியத்தை நிறுத்திவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த ஐந்து ஆண்டுகளில் 12,944 வெளிநாட்டு ஊழியர்களின் ஓய்வூதியத்தை ஓய்வூதிய திணைக்களம் நிறுத்தியுள்ளது.

அதன்படி, 2018 ஆம் ஆண்டில் 1289, 2019 ஆம் ஆண்டில் 937, 2020 ஆம் ஆண்டில் 95, 2021 ஆம் ஆண்டில் 2490, 2022 ஆம் ஆண்டில் 4108, 2023 ஆம் ஆண்டில் 3,825 பேருக்கான ஓய்வூதியம் நிறுத்தப்பட்டுள்ளது. (அ)

# நாடு திரும்பினார் ஜனாதிபதி

கொழும்பு, டிசெ. 06

ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டில் பங்குபற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன் தினம் நாடு திரும்பியுள்ளார்.

நேற்று முன் தினம் இரவு டுபாயில் இருந்து இலங்கை வந்தடைந்ததாக விமான நிலைய தகவல்கள் தெரிவித்தன.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி காலநிலை நீதி மன்றத்திற்கான முன்மொழிவை முன்வைத்ததுடன்,காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழக திட்டத்தை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். (அ)

# கிழக்கு ஆதிவாசிகளின் கல்வி பிரச்னைக்கு 24 மணிநேரத்தில் தீர்வு வழங்கினார் ஆளுநர்

மட்டக்களப்பு, டிசெ. 06

**மட்டக்களப்பு வாகரை ஆதிவாசிகள் கிராமத்தின் பாதை புனரமைப்பிற்கான நடவடிக்கைகளையும், வைத்தியசாலைக்கு உதவியாளரை நியமிப்பதற்கான வேலைத்திட்டத்தினையும் முன்னெடுக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பணிப்புரை விடுத்துள்ளார்.**



வாகரையில் உள்ள ஆதிவாசிகளினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய அவர் குறித்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு வாகரை ஆதிவாசிகள் கிராமத்திற்கு கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது, குறித்த பகுதியில் பல வருடமாக காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் ஆதிவாசிகள் கிழக்கு மாகாண ஆளுநரிடம் குறிப்பிட்டனர்.

இந்தநிலையில் அவர்களின் கோரிக்கைகளின் பிரகாரம் 24 மணித்தியாலத்தில் மாகாண கல்வி அமைச்சின் ஊடாக 02 ஆசிரியர்கள் குறித்த பகுதியிலுள்ள பாடசாலைக்கு நியமிக்கப்பட்டனர்.

அத்துடன் வாகரை ஆதிவாசிகள் கிராமத்தின் பாதை புனரமைப்பிற்கான நடவடிக்கைகளையும், வைத்தியசாலைக்கு உதவியாளரை நியமிப்பதற்கான வேலைத்திட்டத்தினையும் முன்னெடுக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இதன்போது அவர் பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# மாணவர் கௌரவிப்பும் பரிசளிப்பு வைபவமும்

அம்பாறை, டிசெ. 06

சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் தேசிய பாடசாலையில் பாடவிதான மற்றும் புறப்பாடவிதான செயற்பாடுகளில் இவ்வருடம் தமது திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்கள், சக மாணவர்கள் ஆசிரியர்கள் முன்னிலையில் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் றிப்கா அன்ஸார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஐந்தாம் ஆண்டு புலமை மாணவர்கள் க.பொ.த.சாதாரணதர பரீட்சை, அதி திறமை மாணவர்கள், தமிழ்மொழித்தின மற்றும் ஆங்கிலதினப் போட்டிகள், சமூக விஞ்ஞானப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள், பல்கலைகழகத்திற்கு தெரிவான மாணவர்கள், மாணவர் பாராளுமன்ற பிரதம மந்திரி மற்றும் உறுப்பினர்கள் இந் நிகழ்வில் கௌரவம் பெற்றனர்.

இந் நிகழ்வில் சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்.எம்.அப்துல் மலீக், மற்றும் கல்முனை கல்வி வலயத்தின் தமிழ்ப்பாட வளவாளர் ஜெஸ்மி எம் மூஸா ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

(அ)

மாவீரர் நினைவேந்தல்

# கைதான நான்கு பேரின் விளக்கமறியல் நீடிப்பு!

மட்டக்களப்பு, டிசெ. 06

மட்டக்களப்பு தரவை மாவீரர் இல்லத்தில் நினைவேந்தலில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 4 பேரையும் எதிர்வரும் 18 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு வாழைச்சேனை நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த மாதம் 27 ஆம் திகதி கிரான் பிரதேசத்திலுள்ள தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் இடத்தினை அலங்கரித்த கொடிகள், கம்பங்கள், ஜெனரேற்றர், ஒலி பெருக்கி என்பவற்றை வாகனத்தில் வீட்டிற்கு எடுத்துக் கொண்டு திரும்பியவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

மாவீரர் நினைவேந்தல் ஏற்பாட்டாளர் , ஒலிபெருக்கி உரிமையாளர் மற்றும் அவரது 19 வயது மகன் மற்றும் வாகனசாரதி ஆகியோரை வாழைச்சேனை பொலிஸார் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 28 ஆம் திகதி கைது செய்யப்பட்டவர்களின் விளக்கமறியலை நேற்றோடு இரண்டாவது தடவையாகவும் நீடித்து வாழைச்சேனை நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

(அ)

# பாரம்பரிய உணவுகள் மூலம் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கல் நிகழ்வு இறக்காமத்தில்





அம்பாறை, டிசெ. 06

இறக்காமம் பிரதேச செயலகத்திண் பாரம்பரிய உணவுகள் மூலம் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குதல் என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன் தினம் திங்கட்கிழமை இறக்காமம் அமீர் -அலிபுரம் வித்தியாலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

சுகாதார அமைச்சின் சுதேச வைத்திய பிரிவின் கீழ் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.றிஜாஸ் நெறிப்படுத்தலின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் “குரக்கன் கஞ்சி தயாரித்தல் மற்றும் அதனால் கிடைக்கின்ற நன்மைகள்” தொடர்பாக இறக்காமம் ஆயுர்வேத வைத்தியசாலை வைத்தியர் கே. எல். எம். நக்பரால் சிறப்பு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.

மேலும், இந் நிகழ்விற்கு இறக்காமம் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கே. எல்.ஹம்சார் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்து ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குதல் தொடர்பாக விளக்கங்களையும் தெளிவுபடுத்தி இருந்தார்.

(அ)

# கடல் கொந்தளிப்பினால் கிழக்கு மீனவர்கள் அச்சம்



அம்பாறை, டிசெ. 06

அம்பாறை மாவட்டத்தின் கடல் பரப்பில் ஏற்படும் கடல் கொந்தளிப்பால் மீனவர்கள் சிரமத்திற்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

பயன்தரும் தென்னைமரங்கள் சேதமடைள்ளதாகவும், தோணி மற்றும் படகுகளையும் நிறுத்திவைப்பதற்கு தற்போது போதிய இடவசதியும் , தமது மீன்பிடி உபகரணங்களை பாதுகாத்து வைப்பதற்கான மீன்வாடிகளும் இல்லாமலிருப்பது தமக்கு பெரும் கவலையளிப்பதாகவும், இந்த நிலைமை ஏற்படுவதற்கு ஒலுவிலில் அமைக்கப்பட்டுள்ள மீன்பிடி துறைமுகமும் ஒரு காரணமாகும் எனவும் பிரதேச மீனவர்கள் மேலும் தெரிவித்தனர்.

தற்போது கடலரிப்பை தடுப்பதற்கான தடுப்புக் கல் இடும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறாக தொடர்ச்சியாக கடலரிப்பினால் கடற்கரை பிரதேசம் காவு கொள்ளப்பட்டு போகுமேயானால் எதிர்காலத்தல் இப்பிரதேசத்தில் கடற்கரையொன்று முழுமையாக இல்லாமல்போனலும் போகலாம் என்ற அச்சம் இப்பிரதேசமக்களிடையே அதிகரித்துள்ளது.

# 2 கோடி ரூபா செலவில் வைத்தியசாலை திறப்பு

மட்டக்களப்பு, டிசெ. 06

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் ரூ.2 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு நாவலடி ஆரம்ப சுகாதார சேவைகள் நிலையம் நேற்று முன் தினம் திங்கடக்கிழமை காலை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானினால் திறந்து வைக்கப்பட்டது.

சுனாமி தாக்கத்தினால் முற்றாக பாதிக்கப்பட்ட நாவலடி பிரதேசத்தில் சுகாதார வைத்திய நிலையம் இன்மையால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்தனர்.

சுமார் மூன்று கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு சென்று தமது வைத்திய தேவைகளை




நிறைவேற்றி வந்த நிலையில் இராஜாங்க அமைச்சர்களான சிவனேசத்துரை சந்திரகாந்தன் மற்றும் சதாசிவம் வியாழேந்திரன் ஆகியோர் விடுத்த வேண்டுகோளை அடுத்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் முயற்சியினால் இவ்வைத்திய நிலையம் திறந்து வைக்கப்பட்டது. (அ)

ஈழநாடு



# குடியேற்றத்தைக் குறைப்பதற்கு பிரிட்டனில் கடும் வீசா விதிகள்!

லண்டன், டிசெ. 06

**பிரித்தானியா அரசாங்கம் முக்கிய நடவடிக்கையாக குடியேற்றத்தைக் குறைக்கும் வகையில் தீவிர கட்டுப்பாடுகளை அறிவித்துள்ளது.**

**இதில் திறமையான வெளிநாட்டு தொழிலாளர்கள் பிரித்தானியாவில் பணிபுரிய விஸா பெற விரும்பினால் அவர்கள் சம்பாதிக்க வேண்டிய குறைந்தபட்ச சம்பளத்தை உயர்த்துவது உட்பட பல நடவடிக்கைகளை அரசாங்கம் அறிவித்துள்ளது.**




உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின்படி 2022ஆம் ஆண்டில் பிரித்தானியாவிற்கான நிகர இடம்பெயர்வு 7,45,000 ஆக உயர்ந்ததை அடுத்து பிரதமர் ரிஷி சுனக் மீது கடும் அழுத்தங்கள் ஏற்பட்டன.

இந்நிலையில், குடியேற்ற நடவடிக்கையை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்த நடவடிக்கைகள் இங்கிலாந்துக்கு நன்மை பயக்கும்” என்று பிரதமர் ரிஷி சுனக் எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருந்தார்.

முதுகலை ஆராய்ச்சிப் பட்டம் பெற்றிருந்தால் தவிர, வெளிநாட்டு மாணவர்கள் குடும்ப உறுப்பினர்களை இங்கிலாந்துக்கு அழைத்து வருவதைத் தடை செய்தல் மற்றும் வெளிநாட்டு ஊழியர்களுக்கான சம்பள வரம்பை 38,000 பவுண்டுகளாக உயர்த்துவது ஆகியவை இந்த நடவடிக்கைகளில் அடங்கும்.

இதன்படி, அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து, திறமையான வெளிநாட்டு தொழிலாளர்கள் 38,700 பவுண்டுகள் சம்பாதிக்க வேண்டும் என உள்துறை அமைச்சர் ஜேம்ஸ் அறிவித்துள்ளார்.

இந்த கட்டுப்பாடுகள் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடைமுறைக்கு வரும் என உள்துறைச் செயலாளர் பாராளுமன்றத்தில் தனது திட்டங்களை முன்வைத்தபோது வலியுறுத்தியிருந்தார்.

“புதிய குடியேற்றத் திட்டம் மூலம், நிகர குடியேற்றத்தை தீர்க்கமாக குறைத்து, பிரித்தானிய மக்களுக்காக வேலை செய்யும் அமைப்பை உருவாக்குவோம்” என்று உள்துறை அலுவலகம்தெரிவித்துள்ளது.

பிரித்தானிய அரசாங்கம் கொண்டுவந்துள்ள புதிய திட்டங்கள்

1. குடும்பத்தைச் சார்ந்தவர்களைக் கொண்டு வரும் வெளிநாட்டுப் பராமரிப்புப் பணியாளர்களை நிறுத்துதல் மற்றும் விசாவுக்கு நிதியுதவி செய்ய இங்கிலாந்தில் உள்ள பராமரிப்பு நிறுவனங்கள் பராமரிப்புத் தர ஆணையத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

2024-25க்குள் இதன் ஊடாக வருகையை 20 சதவீதத்திற்கும் அதிகமாகக் குறைப்பதன் மூலம் இந்த மாற்றம் மதிப்பிடப்பட்டுள்ளது.

2. இந்த வகையான வேலைகளுக்கான சராசரி முழுநேர ஊதியத்திற்கு ஏற்ப, திறமையான தொழிலாளர் வழியைப் பயன்படுத்துபவர்களுக்கு அடுத்த வசந்த காலத்தில் இருந்து 38,700 பவுண்டுகளாக வருமான வரம்பை உயர்த்துதல்.

3. வெளிநாட்டில் இருந்து வரும் தொழிலாளர்களை குறைத்து, தொழிலாளர்கள் பற்றாக்குறையாக உள்ள தொழில்களுக்கான 20 சதவீத ஊதிய தள்ளுபடியை முடிவுக்கு கொண்டு வந்து, தொழில் பற்றாக்குறை பட்டியலை சீர்திருத்துதல்.

4. குடும்ப விசாக்களுக்கான குறைந்தபட்ச வருவாயை 38,700 பவுண்டுகளாக உயர்த்துதல், திறமையான தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச சம்பள வரம்புக்கு சமமான அதே வரம்பு.

5. மாணவர்கள் குடும்ப உறுப்பினர்களை இங்கிலாந்துக்கு அழைத்து வருவதற்கான விதிகளை கடுமையாக்குதல். இடம்பெயர்வு ஆலோசனைக் குழு பட்டதாரி வழியையும் மதிப்பாய்வு செய்யும்.

குடியேற்ற நடவடிக்கை பிரித்தானியாவில் நீண்டகால் பிரச்சினையாக இருந்து வருகின்றது. அடுத்த ஆண்டு எதிர்பார்க்கப்படும் பொதுத் தேர்தலில் முக்கிய விடயமாக இதனை அரசியல் கட்சிகள் கையாளும் என தெரிவிக்கப்படுகின்றது.

2020 ஜனவரியில் பிரித்தானியா முறையாக ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு வெளியேறியதில் இருந்து சட்டப்பூர்வ இடம்பெயர்வு அதிகரித்துள்ளது. 2021ஆம் ஆண்டில் பிரித்தானியாவில் நிகர இடம்பெயர்வு 488,000 ஆக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

இஸ்ரேல்-ஹமாஸ் போர்

# பலஸ்தீனர்கள் பாதிக்கப்படுவதை தவிர்க்க அமெரிக்கா வலியுறுத்தல்

கொழும்பு, நவ. 06

இஸ்ரேல்-ஹமாஸ் போரில் பலஸ்தீன மக்கள் பாதிக்கப்படுவதை தவிர்க்க வேண்டும் என்று இஸ்ரேலை அமெரிக்கா வலியுறுத்தியிருக்கிறது

போர் நிறுத்த ஒப்பந்தம் நிறைவடைந்துள்ள நிலையில், மீண்டும் போர் ஆரம்பமாகியுள்ளது.

இஸ்ரேல், காஸாவின் தெற்கு வட்டாரங்களை இலக்கு வைத்து இராணுவத் தாக்குதலை நகர்த்தி வருவதால் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுமாறு அமெரிக்கா அழுத்தம் கொடுத்துள்ளது.

இந்நிலையில் அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ், பாலஸ்தீன அப்பாவி மக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

“இஸ்ரேலுக்கு தன்னைத் தற்காத்துக் கொள்ள உரிமை உண்டு. அதே சமயத்தில் அனைத்துலக மற்றும் மனிதாபிமான சட்டங்களை இஸ்ரேல் மதிக்க வேண்டும்” என தெரிவித்தார்.

மேலும், அமெரிக்க தற்காப்பு அமைச்சரான லாய்ட் ஆஸ்டினும் பொதுமக்களை பாதுகாக்கும் தார்மீகக் கடமை இஸ்ரேலுக்கு இருக்கிறது என்று கூறினார்.

டிசெம்பர் முதலாம் திகதி போர் நிறுத்தம் நிறைவடைந்த பின்னரான தாக்குதல் நடவடிக்கைகளில் 193 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாகக் காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

“ஹமாசிடம் தற்போது இஸ்ரேலிய வீரர்களும் இஸ்ரேலிய இராணுவத்தில் முன்பு பணியாற்றிய ஆண்களும் பிணைக் கைதிகளாக உள்ளனர்.

போர் நிறுத்தப்பட்டு இஸ்ரேலிய சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாலஸ்தீனர்கள் அனைவரும் விடுவிக்கப்படும் வரை பிணைக் கைதிகளை நாங்கள் விடுவிக்க மாட்டோம். அது வரை போர் தொடரட்டும். இதுதான் எங்கள் இறுதி முடிவு” என ஹமாஸ் துணைத் தலைவர் சாலே அல்-அரோவ்ரி தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)



# பேச்சுக்கு இடமே இல்லை இஸ்ரேல் அரசு திட்டவட்டம்

## தெற்கு காஸா மக்கள் தங்க இடமின்றி பரிதவிப்பு



டெல் அவிவ், டிசெ. 06

இஸ்ரேல்- ஹமாஸ் தற்காலிக போர் நிறுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து இஸ்ரேலின் தாக்குதல் தீவிரமடைந்துள்ள நிலையில், காஸா மக்கள் தங்க இடமில்லாமல் தவிக்கின்றனர்.

தற்காலிக போர் நிறுத்தம் முடிவுக்கு வந்த நிலையில், அதன் பின்னர் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 100க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதாக ஹமாஸ் அமைப்பினர் தெரிவித்தனர்.

தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்தம் 7 நாட்கள் நீடிக்கப்பட்ட நிலையில் ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் எல்லையில் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் குற்றம் சுமத்தியிருந்தது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியதாக கூறி தற்போது இஸ்ரேல் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.

போரில் வடக்கு காஸா பகுதி பெருமளவு பாதிக்கப்பட்ட நிலையில், வாழத்தகுதியற்ற பகுதியாக காணப்படும் வடபகுதியிலிருந்து இலட்சக்கணக்கான மக்கள் தெற்கு பகுதி மற்றும் முகாம்களுக்கு இடம்பெயர்ந்தனர்.

இந்நிலையில், தெற்கு காஸாவின் கான் யூனிஸ் நகரில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளதுடன், தாக்குதலை தீவிரப்படுத்துவதாகவும் அறிவித்துள்ளது.

எனவே அங்கிருக்கும் மக்களை எகிப்து எல்லையை ஒட்டிய பகுதிக்கு செல்லுமாறு இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதனால் தங்குவதற்கு இடமில்லாமல் மக்கள் தவித்து வருகின்றனர். வடக்கு, தெற்கு என இரு பகுதிகளிலும் இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

போர் நிறுத்த அமைதி பேச்சுவார்த்தையில் இருந்து இஸ்ரேல் விலகியுள்ளது.

போர் நிறுத்தத்தால் ஹமாஸ் அமைப்பினர் பிடித்து சென்ற நூற்றுக்கும் மேற்பட்ட பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டதுடன், இஸ்ரேலிய சிறையில் வாடும் பலஸ்தீனியர்களும் நூற்றுக்கணக்கானோர் விடுவிக்கப்பட்டனர்.

இதற்கிடையில் பெண்கள் மற்றும் குழந்தைகளை விடுவிக்க முதலில் ஹமாஸ் படையினர் ஒப்புக் கொண்டனர். ஆனால் பின்னர் அதிலிருந்து ஹமாஸ் படையினர் பின்வாங்கி விட்டதாக இஸ்ரேல் குற்றம் சாட்டியது.

இதனால் நீட்டிக்கப்பட இருந்த தற்காலிக போர் நிறுத்தத்தில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை இஸ்ரேல் பின்வாங்கியது. பேச்சுவார்த்தைக்காக கத்தாரில் இருந்த இஸ்ரேலின் உளவு அமைப்பான மொஸாட் அதிகாரிகளையும் இஸ்ரேல் திரும்ப பெற்றுக்கொண்டது.

இந்நிலையில் இரு படைகளுக்கும் இடையிலான சண்டை தற்போது மேலும் தீவிரமடைந்துள்ளது.

காஸா பகுதியில் ஹமாஸ் மற்றும் ஜிஹாத் அமைப்பினரை குறிவைத்து 400 மேற்பட்ட இடங்களில் தாக்குதல் நடத்தி இருப்பதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

ஆண்களை விடுவிக்க வேறு விதமான நிபந்தனைகளை முன்வைக்கும் ஹமாஸ், பெண்கள் மற்றும் குழந்தைகளை விடுவிக்காத வரை எந்தவொரு பேச்சுவார்த்தைக்கும் இஸ்ரேல் தயாராக இல்லை என தெரிவித்துள்ளது. (அ)

# பிள்ளைகளின் நிர்வாண படங்களை விற்று உழைக்கும் நிலைக்கு சமூகம்

## ஹரிணி அமரசூரிய சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 05

**தமது பிள்ளைகளின் நிர்வாண படத்தை வைத்து உழைக்கும் நிலைக்கு சமூக நிலை பலவீனமடைந்துள்ளது. இதற்கு ஆட்சியாளர்கள் பொறுப்புக் கூறவேண்டும்.**

இந்த அரசாங்கத்துடன் பேசி பயனில்லை. பாராளுமன்றத்தில் இடம்பெறும் விவாதங்களினால் மக்களுக்கு பயனேதுமில்லை. ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகாரங்கள் அமைச்சு மற்றும் மகளிர், சிறுவர் விவகார அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத்தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு,மகளிர் விவகார அமைச்சுக்கு நிதி ஒதுக்கீடு மட்டுப்படுத்தல் உள்ளிட்ட காரணிகளை முன்னிலைப்படுத்தி தேசிய மக்கள் சக்தியின் மகளிர் அமைப்பினர் கொழும்பில் மேற்கொண்ட போராட்டத்தில் பொலிஸார் வன்மையான முறையில் தாக்குதலை மேற்கொண்டார்கள்.

பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளவர் மூன்று மாத காலத்துக்குள் தனது செயற்பாடுகளை காண்பித்து ஆட்சியாளர்களை மகிழ்விக்க முயற்சிக்கிறார்.

உயர்மட்டத்தில் இருந்து வந்த கட்டளைகளுக்கு அமையவே பொலிஸார் ஜனநாயக போராட்டத்தின் மீது தாக்குதலை மேற்கொண்டார்கள்.

அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளை சுட்டிக்காட்டும் போது அதிகாரத்தை கொண்டு மக்களின் குரல்கள் முடக்கப்படுகின்றன.ஆனால் ஒன்றிணைந்து செயற்பட ஜனாதிபதி அழைப்பு விடுக்கிறார். மக்களுக்கு எதிராக செயற்படும் இந்த அரசாங்கத்துடன் எவ்வாறு ஒன்றிணைவது.இனி பேச்சுவார்த்தையில் ஈடுபட போவதில்லை.சிறந்த தலைமைத்துவத்துக்காக பெண்களை ஒன்றிணைப்பேன்.

குருநாகல் பகுதியில் ஒரு துயரமான சம்பவம் பதிவாகியுள்ளன.ஒரு தந்தை தனது 15 மகளின் நிர்வாண படத்தை சமூக வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்து 01 இலட்சம் ரூபாவை பெற்றுக்கொள்ள முயற்சித்துள்ளார்.

அதற்கு தனது மனைவிக்கு அழுத்தம் பிரயோகித்துள்ளார். இறுதியில் மனைவி அவரை கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளார். இறுதியில் அந்த 15 வயது



சிறுமிக்கு தாயும் இல்லை தந்தையும் இல்லை. இந்த சம்பவத்துக்கு ஆட்சியாளர்கள் பொறுப்புக் கூற வேண்டும்.ஆட்சியாளர்களின் தவறான நிர்வாகத்தினால் சமூகம் இன்று இந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் பேசுவது பயனற்றதாகவே உள்ளது. முன்வைக்கப்படும் கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு இங்கு யாரும் இல்லை. முன்பள்ளி பாடசாலையின் ஆசிரியர்கள் எதிர்க்கொள்ளும் பிரச்சினை பற்றி பேசுமாறு பலர் கோரிக்கை விடுக்கிறார்கள். பேசுவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம், ஆனால் பேசுவதால் எவ்வித பயனுமில்லை.

வெளியில் நடப்பது ஒன்று பாராளுமன்றத்தில் நடப்பது பிறிதொன்று,அரசாங்கம் செயற்படுத்துவது பிறிதொன்று. ஆகவே இந்த ஆட்சியாளர்களினால் எந்த பிரச்னைகளுக்கும் தீர்வு காண முடியாது.மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்-என்றார். (அ)



# கிளிநொச்சியில் யானைகள் அட்டகாசம் வாழ்வாதாரங்களை இழந்துள்ள மக்கள்!

கிளிநொச்சி, டிசெ. 06

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் ரங்கன் குடியிருப்பு மக்கள் காட்டு யானைகளின் தொந்தரவுக்குள்ளாகியுள்ளனர்.

குறித்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு 3 காட்டு யானைகள் மக்கள் குடியிருப்புகள் புகுந்து வாழ்வாதாரத்துக்காக பயிரிடப்பட்டிருந்த மரவள்ளி, வாழை என்பனவற்றை முழுதாக அழித்துள்ளன.

அத்துடன், யானையை துரத்துவதற்காக முற்பட்டவர்களையும் யானை அச்சுறுத்தியதில் இருவர் காயமடைந்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன் யானையால் தாக்கப்பட்டு வலது கால் செயல் இழந்த நிலையில், தற்பொழுது தனக்கு எந்த ஒரு தொழிலுக்கும் செல்ல முடியாத நிலையில் இருப்பதாகவும் பாதிக்கப்பட்ட நபர் தெரிவித்துள்ளார்.

மேலும் தான் இந்தியாவிலிருந்து கடந்த பத்து வருடங்களுக்கு முன் நாடு திரும்பி வாழ்ந்து வருவதுடன், பலமுறை யானைகளினால் தனது பயிர்களுக்கு தொடர்ந்தும் சேதங்கள் ஏற்பட்டு வருவதாகவும் கவலை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பெப்ரவரி 19ஆம் திகதிக்கு முன் பாடப்புத்தகங்கள் வழங்கப்படும்

கொழும்பு, டிசெ. 06

அடுத்த வருடம் பெப்ரவரி 19 ஆம் திகதிக்கு முன்னர் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் வழங்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த் அறிவித்தார்.

பாராளுமன்றில் வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி அமைச்சின் செலவீனங்கள் மீதான குழு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதேநேரம் பின்தங்கிய நிலையில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான பாதணி வவுச்சர்கள் வழங்குவதற்கு 2200 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி 7,47,093 மாணவர்களுக்கு பாதணி வவுச்சர்கள் வழங்கப்படும் என்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த் கூறினார். (அ)

# சிறுவர்களுக்கு புலிகளின் சீருடை; முற்றிலும் வெறுக்கத்தக்க செயல்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கவலை

கொழும்பு, டிசெ. 06

வடக்கில் மாவீரர் தினதிற்கு விடுதலைப் புலிகள் அமைப்பின் சீருடைக்கு ஒத்த சீருடைகளை சிறுவர்களுக்கு அணிந்தமையானது முற்றிலும் வெறுக்கத்தக்க செயற்பாடு என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

இளைஞர் விவகாரங்கள் மற்றும் மகளிர், சிறுவர் விவகார அமைச்சு ஆகியவற்றுக்கான செலவீனங்கள் குறித்த பாராளுமன்ற அமர்வில் பேசிய அவர், இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதை இனியாவது தவிர்த்துக்கொள்ளவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

கல்முனை பகுதியில் சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு நிலையத்தில் 15 வயது சிறுவன் உயிரிழந்த சம்பவம் மற்றும் கடந்த மாதம் மாத்திரம் 16 வயதுக்கு குறைவான 131 சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட சம்பவங்கள் குறித்தும் அவர் கவலை வெளியிட்டார்.

இதேநேரம், அரசியலமைப்பின் சமவுரிமை, பெண் சமத்துவம் தொடர்பில் பேசப்படுகிற போதும் பாரம்பரிய சம்பிரதாயங்கள் கடைப்பிடிக்கப்படுவதால் பெண்களுக்கு சமவுரிமை இப்போதும் வழங்கப்படுவதில்லை என்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார். (அ)

# அடிப்படை வசதிகள் இன்றி, விசேட வகுப்புகள் இல்லாது கொக்கிளாய் பாடசாலை 100 வீத சித்தி பெற்று சாதனை

முல்லைத்தீவு, டிசெ. 06

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக்கிராமங்களில் ஒன்றான கொக்கிளாய் கிராமத்தில் இயங்கிவரும் கொக்கிளாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளில் 100 வீத சித்தியடைந்து சாதனை படைத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக்கிராமமாக காணப்படும் கொக்கிளாய் பகுதியில் உரிய அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கிவரும் பாடசாலையே கொக்கிளாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட குறித்த பாடசாலையில் இருந்து கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் நான்கு மாணவர்



கள் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

இவர்கள் நால்வரும் சித்தியடைந்து உயர்தரம் கற்க தகுதி பெற்றுள்ளதோடு நூறு வீத சித்தியையும் பதிவு செய்துள்ளனர்

இதற்கமைவாக பரீட்சையில் தோன்றிய சிறி ஆனந்தராசா அபின்சன் 3ஏ 3பி 3சி, லூக்காஸ் அனுப்பிரியா ஏ, பி, 4சி, எஸ், நாகராசா புவர்னா ஏ, 4 பி, 3 சி, எஸ், அருளானந்தம் கார்த்திகா 3ஏ, 5 பி, சி ஆகிய பெறுபேறுகளை பெற்று சித்தியடைந்து உயர்தரம் கற்க தகுதி பெற்றுள்ளனர்.

இதன் போது கருத்து தெரிவித்த மாணவர்கள்-உரிய அடிப்படை வசதிகள் இல்லாதபோதும் விசேடமாக கல்வி நிலைய வசதிகள் ஏதும் இன்றியும் பாடசாலை கல்வியை மாத்திரம் கற்று ஆசிரியர்களின் அயராத முயற்ச்சியின் பயனாக தாம் இந்த சித்தியை பெற்றதாகவும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் கூறினர். (அ)

# களனிப் பல்கலைக்கழக கற்கைகள் இடைநிறுத்தம்

கொழும்பு, டிசெ. 06

களனிப் பல்கலைக்கழகத்தின் கற்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு அதன் நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, களனிப் பல்கலைக்கழகம் நேற்று முன் தினம் பிற்பகல் 2 மணி முதல் மறு அறிவித்தல் வரை மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனையவை மூடப்படும் என களனிப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் அறிவித்துள்ளார்.

இந்நிலையில் , அனைத்து விடுதி மாணவர்களும் நேற்று காலை 5 மணிக்கு முன்னதாக தங்கும் விடுதிகளை விட்டு வெளியேறவேண்டும் என்று உரிய அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், மறு அறிவித்தல் வரை, களனிப் பல்கலைக்கழகத்தின் தலுகம வளாகம் மற்றும் பல்கலைக்கழகத்தின் அனைத்து உள்ளக மற்றும் வெளி விடுதிகள் உட்பட பல்கலைக்கழக வளாகத்திற்குள் மாணவர்கள் பிரவேசிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

களனிப் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றிய பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வறையில் உறங்கிக் கொண்டிருந்தபோது கடத்திச் செல்லப்பட்டு, தாக்கப்பட்டு, நுழைவாயிலில் கட்டிவைக்கப்பட்ட காரணத்தினாலேயே இவ்வாறு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக உபவேந்தர் தனது அறிவிப்பில் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## அதிகாரங்களை...

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பட்ஜெட் விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

புதிய பல்கலைக்கழங்களையும் தனியார் பல்கலைக்கழகங்களையும் உருவாக்குவதாக ஜனாதிபதி முன்மொழிந்துள்ளார். அத்துடன், பல்கலைக்கழகங்களை உருவாக்கும் அதிகாரம் மாகாண சபைகளுக்கும் வழங்கப்படுவதாகவும் அரசு அறிவித்துள்ளது.

இதில் முதலாவது பிரச்னை , பல்கலைக்கழகங்களை உருவாக்கி அவற்றுக்கான ஆளணி மற்றும் பௌதிக வளங்களை வழங்கும் இயலுமை மாகாண சபைகளுக்கு உள்ளதா என்பது அடுத்தது பல்கலைக்கழகங்களை உருவாக்கும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் என்றால் அந்த மாகாண சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் இருக்க வேண்டும்.

தற்போது நாட்டில் உள்ள மாகாண சபைகள் அனைத்தும் ஆளுநர்களின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. அங்கு மக்கள் பிரதிநிதிகள் எவரும் இல்லை. இவ்வாறான நிலையில் மாகாண சபைகளால் எப்படி பல்கலைக்கழகங்களை உருவாக்க முடியும்? அவ்வாறு மாகாண சபைகளைக் கொண்டு பல்கலைக்கழகங்களை அரசு உருவாக்க விரும்பினால் முதலில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும் - என்றார். (ஐ)

## புலமைப்பரிசில்

தீவிரப்படுத்துகிறது.

அண்மையில் இடம்பெற்ற தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 99 சதவீதமானவர்கள் பரீட்சை முடிந்த பின்னர் வீட்டுக்கு அழுது கொண்டே சென்றார்கள். வினாத்தாள் கடினம் என்று மாணவர்கள் குறிப்பிட்டார்கள். சகல மாவட்டங்களிலும் இவ்வாறான நிலைமையே காணப்பட்டது.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு வெளியான பிறகு ஒருசில பெற்றோர் முறையற்ற வகையில் நடந்து கொள்கிறார்கள். தமது பிள்ளை குறைவான புள்ளிகளை பெற்றுக்கொண்டால் அந்த பிள்ளையை நெருக்கடிக்கு உள்ளாக்குகிறார்கள் - மிலேச்சத்தனமாக தாக்குகிறார்கள். இவ்வாறான செயல்பாடுகளால் அந்த பிள்ளை உளவியல் ரீதியில் பாதிக்கக்கூடும்.

கடந்த காலங்களில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு வெளியேறிய பின்னர் குறைந்த புள்ளிகளை பெற்ற பிள்ளைகள் தற்கொலை செய்து கொண்ட சம்பவமும் நாட்டில் பதிவாகின. ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை பிள்ளைகளுக்கு பெரும் சுமையாகவே உள்ளது. எனது ஆட்சியில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையை இரத்து செய்வதற்கு நான் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தேன். ஆனால், அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. முன்னேற்ற மடைந்த நாடுகளில் எட்டாம் தரத்துக்கு பின்னரே பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. ஆனால், இங்குதான் முதலாம் தரத்தில் இருந்து பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. இந்த முறைமை மாற்றம் பெற வேண்டும்.

ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையிலான உறவு நிலை தற்போது கேள்விக்கு உள்ளாக்கப்பட் டுள்ளது. மாணவர்களை தண்டிக்க முடியாத நிலையில் ஆசிரியர்கள் உள்ளார்கள். மாணவர்களை தண்டித் தால் அவர்களின் பெற்றோர் மனித உரிமை என்று குறிப்பிட்டுக் கொண்டு பொலிஸில் முறைப்பாடு அளிக்கி றார்கள். அதன் பின்னர் ஆசிரியர் தண்டிக்கப்படுகிறார். ஆசிரியர்கள் மீதான மாணவர்களின் மதிப்பு மற்றும் கௌரவம் தற்போது முழுமையாக இல்லாதொழிந்துள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் எவ்வாறு சிறந்த எதிர் கால தலைமுறையை எதிர்பார்க்க முடியும் - என்றார்.

## காணாமல்

முன்னாள் செய்தியாளர் பிரான்சிஸ் ஹரிசன் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்த ஆவணத்தில், “இலங்கை பயங்கரவாத சட்டத்தை மறு ஆய்வுக்கு உட்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. அதேநேரம் மனித உரிமைகளை பாதுகாக்கவும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. காணாமல் போனவர்களின் பணிமனை மக்களின் நம்பிக்கையை பெற்றுள்ளது என்றும் 16 பேர் உயிருடன் இருப்பதையும் மூவர் உயிரிழந்ததையும் அது கண்டறிந்துள்ளது. காணாமல் போனவர்களுக்கான பணிமனை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு உரிய ஆவணங்கள் கிடைக்க உதவுகின்றது.

முல்லைத்தீவில் மனித புதைகுழி அகழ்வின்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பணிமனை கண்காணிப்பாளராகவும் தீவிர ஆர்வத்துடனும் பங்கேற்றது - என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, காணாமல் போனோர் பணிமனையை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியாக நிராகரித்து வருகிறார்கள். அந்தப் பணிமனைக்கு எதிராக போராட்டங்களையும் நடத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஆசிய

இலங்கையின் பொருளாதாரம் 7.8 வீதமாக சுருங்கியது.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 290 கோடி டொலர் கடன் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இதன் கீழ் முதல் கட்ட கடனை இலங்கை பெற்றுள்ளது. இந்நிலையில், இரண்டாவது கட்ட கடனின் கிடைப்பனவு எதிர்வரும் 12ஆம் திகதி நடக்கும் மீளாய்வு கூட்டத்தில் முடிவாகும். எனினும், இந்தக் கடன் கிடைக்கும் என்று இலங்கை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், 60 கோடி டொலர்களை கட்டம்கட்டமாக கடனாக வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி உத்தரவாதம் அளித்துள்ளது. மின்சார துறை சீர்திருத்தத்துக்கு 20 கோடி டொலர்கள், நீர்வளத் துறைக்கு 10 கோடி டொலர்கள், சுற்றுலா துறைக்கு 5 கோடி டொலர்கள் வழங்கப்படும் என்றும் தெரிய வருகிறது.

## அதிக....

தெரிவிக்கின்றன.

இவ்வாறு சிகிச்சைக்கு வருபவர்களில் பெருமளவானோர் 25 வயதுக்கு குறைந்தவர்கள் என்றும் அறிய வருகின்றது.

வெளிநாடுகளுக்கு செல்வதற்காக, இளையோர் பலர் மருத்துவ சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதற்காக போதனா மருத்துவமனைக்கு மருத்துவ பரிசோதனைக்காக வருகின்றனர். இவ்வாறானவர்களுக்கு பரிசோதனைகளை மேற்கொள்ளும் போது, நுரையீரல் மற்றும் இருதய வால்வு ஆகியவற்றில் கிருமி தொற்றுகள் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அது தொடர்பில் அவர்களிடம் பெற்றுக்கொண்ட தகவலின் அடிப்படையில அவர்கள் ஊசி மூலம் போதைப்பொருளை நுகர்வது கண்டறியப்பட்டது.

அதேவேளை சுவாசிக்க முடியாமல் சிரமத்துடன், கடும் காய்ச்சலுடனும் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வரும் இளையோருக்கு மேற்கொண்ட பரிசோதனையில் அவர்களுக்கும் இருதய வால்வில் தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது.

அவர்களும் ஊசி மூலம் போதைப் பொருளை நுகர்பவர்கள். இவ்வாறாக தினமும் சராசரியாக மூவர் மருத்துவமனைக்கு சிகிசிச்சைக்காக வருகின்றனர் - என்றும் கூறப்பட்டது.

இதேவேளை கடந்த ஒரு வருட காலத்தில், யாழ்ப்பாணத்தில் ஊசி மூலமான போதைப்பொருள் நுகர்வால் 15இற்கும் மேற்பட்ட மரணங்கள் சம்பவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மின்சார பேருந்துகளை அறிமுகப்படுத்த திட்டம்

கொழும்பு, டிசெ. 06

லங்கா அசோக் லேலண்ட் நிறுவனம் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் மின்சார பேருந்துகளை உள்நாட்டில் பொருத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

ஆரம்ப கட்டமாக பயணிகள் போக்குவரத்துக்கு 5 பேருந்துகள் இணைக்கப்படவுள்ளன என்று நிறு வனம் மேலும் தெரிவித்துள்ளது.

இவ்வாறான பேருந்து ஒருமுறை சார்ஜ் செய்தால் 300 கிலோமீற்றர் தூரம் செல்லக் கூடியதென தெரிவிக்கப்பட்டுள்ளது.




## பிரபாகரனை...

வெளியிடப்பட்டுள்ளது. இந்த காணொலிக்கும் இலங்கைப் புலனாய்வு பிரிவுக்கும் இடையில் எந்தவித தொடர்பும் இல்லை.“

“அந்த போலி காணொலிக்கும் வெளிநாட்டு அரசுகளுக்கும் இடையில் தொடர்பு இருக்கும் என்று என்னால் கூற முடியாது. அதேவேளை, தொடர்பு இல்லை என்றும் என்னால் கூற முடியாது. ஆனால், இதன் பின்னணியில் புலம்பெயர் தமிழர்களின் ஒரு குழு திட்டமிட்டுச் செயல்பட்டுள்ளது என்பது நூறு வீதம் உண்மை.

“2019ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப் போரில் பிரபாகரனும் அவரின் குடும்பத்தினரும் உயிரிழந்து விட்டனர். அவர்களை வைத்து இனி எவரும் அரசியல் செய்ய முடியாது. அது அவர்களை அவமானப்படுத்தும் செயல். பிரபாகரனின் கொள்கைகளில் எனக்கு உடன்பாடு இல்லை. ஆனால், அவர் நேர்மையான ஒரு தலைவர். இறுதி வரை போராடிய ஒரு தலைவர்“ - என்றும் அவர் கூறினார். (ஐ)

## தடைகள்...

இலங்கையில் தமிழர் பகுதிகளில் இராணுவ மயமாக்கல் தொடர்கிறது. இது பிரிட்டனினதும் சர்வதேச சமூகத்தினதும் கூட்டுத் தோல்வி என்று பிரிட்டனின் எதிர்க்கட்சியான தொழில் (லிபரல்) கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் மக்டொனல் தெரிவித்தார்.

இலங்கையில் போர் குற்றங்களில் ஈடுபட்ட முன்னாள் இராணுவ தளபதி சவேந்திர சில்வா உள்ளிட்டவர்களுக்கு தடை விதிப்பது தொடர்பான விவாதம் நேற்று செவ்வாய்க்கிழமை பிரிட்டன் பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், “இலங்கைக்கு எதிராக தடைகளை விதித்தமைக்காக அமெரிக்கா கனடாவை பாராட்டுகிறேன். எனது தொகுதியை சேர்ந்த ஒருவர் தனது குடும்பத்தைப் பற்றி அறிய இலங்கைக்கு சென்றார். அதன் பின்னர் அவர் காணாமல் போய்விட்டார். அவருக்கு என்ன நடந்தது என்பது இன்று வரை தெரியாது”, என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை, லிபரல் ஜனநாயக கட்சியின் தலைவர் எட் டேவே உரையாற்றுகையில்,

“அமெரிக்கா, கனடாவை பின்பற்றி இலங்கையின் இராணுவ அதிகாரிகள் சவேந்திர சில்வா, ஜெகத் ஜெயசூரிய ஆகியோருக்கு எதிராக பிரிட்டன் தடைகளை விதிக்கலாம். இலங்கை மீது செல்வாக்கு செலுத்துவதற்காக வர்த்தக உடன்படிக்கைகளை பயன்படுத்த வேண்டும். ஐ. நா. மனித உரிமைகள் பேரவை பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கவும் வலியுறுத்த வேண்டும். பிரிட்டனும் இதனை வலியுறுத்த வேண்டும்”, என்றும் கூறினார். (ஐ)

# விபத்தில் ஒருவர் படுகாயம்

திருமலை, டிசெ. 06

திருகோணமலை - மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 64 ஆம் கட்டை மலையடி பகுதியில் மோட்டார் சைக்கிளும் காரொன்றும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று முன் தினம் திங்கட்கிழமை காலை இடம்பெற்ற இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்து மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளாதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## யாழ்....

பல்கலைக்கழகம் வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய மிக முக்கிய பல்கலைக்கழகமாக உள்ளது. யாழ். பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறையை ‘பீடமாக’ உருவாக்குமாறு கடந்த ஆண்டும் வலியுறுத்தினேன். ஆனால், இதுவரை அந்த கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை.

தேசிய கல்வி நிறுவகத்தின் கிளையை முல்லைத்தீவு - மாங்குளத்தில் நிறுவுமாறு பலமுறை வலியுறுத்தியுள்ளேன். தற்போதைய பொருளாதார சுமைகளுக்கு மத்தியில் வடக்கு - கிழக்கில் உள்ளவர்கள் தமது துறைசார் நடவடிக்கைகளுக்காக தலைநகருக்கு வருவதால் பல சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். ஆகவே, இந்த கோரிக்கை தொடர்பிலும் கரிசனை கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் சட்ட பீட மாணவர்கள் தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழியில் கற்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் சட்ட பீட மாணவர்கள் தமிழ் மொழியில் சட்ட கல்வியை தொடர வாய்ப்பில்லை. தமது தாய்மொழியில் சட்ட கல்வியை கற்க எதிர்பார்க்கிறார்கள். ஆகவே, அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1988 ஆம் ஆண்டு நான் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்ட பீடத்துக்கு தெரிவானேன். அப்போதைய சூழ்நிலையால் என்னால் சட்ட கல்வியை தொடர முடியவில்லை. சட்டக்கல்வி வாய்ப்பு யாழ். பல்கலைக்கழத்தில் இருந்திருந்தால் நானும் ஒரு சட்டத்தரணியாகி இருப்பேன். ஆகவே, தமிழ் மாணவர்கள் தமது தாய்மொழியில் சட்டத்தை கற்கும் வாய்ப்பை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். யாழ்ப்பாணம் தீவக பாடசாலைகளில் சேவையாற்றும் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் கடினமான முறையில் தான் சேவையில் ஈடுபடுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு விசேட கொடுப்பனவுகளை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன் - என்றும் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# 2ஆம் தவணை கடன் கிடைக்கும் ஆனால் மறுசீரமைப்பில் சிக்கல்!

## ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 06

**சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணைக் கொடுப்பனவு தொடர்பான கலந்துரையாடல் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது. இரண்டாம் கடன் தவணை கிடைக்கும் என நம்புகிறோம். ஆனால் கடன் மறுசீரமைப்பில் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணைக் கொடுப்பனவு தொடர்பான கலந்துரையாடல் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது. கடன் தவணை கிடைக்கும் என நம்புகிறோம். ஆனால் கடன் மறுசீரமைப்பில் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பரிஸ் கிளப் மற்றும் இந்தியா கடனை மறுசீரமைப்புக்கு ஒப்புக்கொண்டதாக அரசாங்கம் கூறுகிறது.

சீனாவிற்கு வழங்கப்படவேண்டிய 5.8 மில்லியன் டொலர்களை மறுசீரமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் இணக்கம் கண்டுள்ளது. ஆனால் ஏனைய கடன் வழங்குநர்களுடன் இலங்கை செய்து கொண்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் வெளிப்படைத்தன்மையுடன் அரசாங்கம் செயற்பட வேண்டும். நாங்கள் எந்த அரசியல் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தினாலும், இந்நாடு எங்களுக்கு முக்கியம்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் ராஜபக்ஷ குடும்பமும் அவர்களுடன் உள்ள குழுவினரும் நாட்டை வங்குரோத்தாக்கும் முடிவுகளை எடுத்துள்ளனர்.

1994ஆம் ஆண்டு மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவால் ஆரம்பிக்கப்பட்ட ஏற்றுமதி கொள்கையை மாற்றியதால் ஏற்றுமதி வருமானம் குறைந்தது. இலங்கை வீழ்ந்த பள்ளத்தில் இருந்து மீள அரசாங்கம் சில உடன்பாடுகளுக்கு வர வேண்டும். இந்த உடன்பாட்டுகள் அனைத்தும் சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்புடையவை.

நாட்டிற்கு கட்டமைப்பு ரீதியான பொருளாதார சீர்திருத்தங்கள் தேவையில்லை என்று பலர் கூறுகின்றனர். சீனா மற்றும் இந்தியாவுடன் பேசி கடனை அடைத்துவிட்டு நகரும் நோக்குகளையே அவர்கள் உள்ளனர். உடன்பாடு மற்றும் கடன் மறுசீரமைப்பு இல்லாமல் நாடு முன்னேற முடியாது. நாட்டைப் பற்றி நாம் சிந்தித்தால், கடன் மறுசீரமைப்பு செயல்முறையைத் தொடர வேண்டும்.

இலங்கையின் மிகக் கடுமையான பிரச்னைகளில் ஒன்று சேமிப்பு இல்லாமையாகும். குறைந்த சேமிப்பு என்பது முதலீடு செய்ய பணம் இல்லை என்பதை காட்டி நிற்கிறது-என்றார். (அ)



## ஹெலியில் நெடுந்தீவுக்கு சென்ற சுற்றுலா பயணிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 06

ஹெலி ஒன்றை வாடகைக்கு அமர்த்தி வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நெடுந்தீவுக்கு விஜயம் செய்து பார்வையிட்டு திரும்பியுள்ளனர்.

நெடுந்தீவில் உள்ள தனியார் சுற்றுலாத்துறை நிறுவனமொன்றின் ஏற்பாட்டிலேயே குறித்த சுற்றுலா பயணிகள் வருகை தந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவின் சுற்றுலாத் துறையை முதன்மையாக ஒரு சிறந்த முன்னேற்ற படிக்கல்லாக இவ்வருகை அமைந்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## மருதானை ரயில் நிலைய கூரை மீது ஏறியவர் தவறி விழுந்து படுகாயம்!

கொழும்பு, டிசெ. 06

மருதானை ரயில் நிலையத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் கூரை மீது ஏறிய நபர் ஒருவர் தவறி விழுந்து படுகாயமடைந்தார்.

மருதானை ரயில் நிலையத்தின் கூரை மீது ஏறிய நபரை பாதுகாப்பாக இறக்குவதற்கு மருதானை பொலிஸாரும் மருதானை ரயில் நிலைய ஊழியர்களும் பல தடவைகள் முயற்சித்தும் அது பலனளிக்கவில்லை.

இந்நிலையில் முற்பகல் 11.20 மணியளவில் அவர் மேற்கூரையில் நடந்து சென்றபோது கூரை உடைந்து நடைமேடையில் விழுந்தார்.

இதன்போது தலையின் பின்பகுதியில் காயம் ஏற்பட்டதால், உடனடியாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கொண்டு செல்லப்பட்டார். (அ)

# மீண்டும் உயரும் மின்சார கட்டணம்

கொழும்பு, டிசெ. 06

அடுத்த மாதம் முதல் மீண்டும் மின் கட்டணம் அதிகரிக்கப்படும் என இலங்கை மின்சார ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் 18 வீதமாக அதிகரிக்கப்படவுள்ள வற் வரி எரிபொருள் விலை நிர்ணயத்தை நேரடியாகப் பாதிப்பதால் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படும் என சங்கத்தின் செயலாளர் ரஞ்சன் ஜயலால் சுட்டிக்காட்டினார்.

மின்சார சபை மறுசீரமைப்பை எதிர்க்கும் தொழிற்சங்கத் தலைவர்களை ஒடுக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய வந்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் மின்சார உற்பத்திக்கான டீசல் போதுமான அளவு ஒதுக்கப்படவில்லை என்று கூறிய அவர், இதுவரையிலும் நாட்டு மக்களுக்கு பலன்கள் வழங்கப்படவில்லை என்றும் குற்றம் சாட்டினார். (அ)

## டெங்கு விழிப்புணர்வு வீதி நாடகம்!

யாழ்ப்பாணம், டிசெ. 06

டெங்கு நோய் பரவல் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வீதி நாடகத்தை ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் நடத்தவுள்ளது.

வித்தியாலய மாணவர்களின் நடிப்பில் உருவாகியுள்ள இந்த விழிப்புணர்வு வீதி நாடகம் இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 5 இடங்களில் நடைபெறும் என்று வித்தியாலய அதிபர் என். ரவீந்திரன் அறிவித்துள்ளார்.

இதன்படி, காலை 9 மணிக்கு அச்சுவேலி பஸ் நிலையத்திலும் காலை 9.40 மணிக்கு ஆவரங்கால் விவேகானந்தா முன்பள்ளியிலும் முற்பகல் 10.20 மணிக்கு ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்திலும் முற்பகல் 11 மணிக்கு ஆவரங்கால் மத்தி முன்பள்ளியிலும் முற்பகல் 11.40 மணிக்கு ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்திலும் வீதி நாடகம் நடைபெறும். (ஐ)

## தொல்பொருட்களுடன் 8 பேர் கைது

கொழும்பு, டிசெ. 06

கடவத்தை பிரதேசத்தில் தொல்பொருட்களுடன் பெண் உட்பட 8 பேர் சந்தேகத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பசுவத்த , கடவத்தை, ராகமை, இமதுவ , ரதகஹமுனை பிரதேசங்களில் வசிக்கும் 20 மற்றும் 54 வயதுக்குட்பட்டவர்களாவர்.

கடவத்தை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

விசாரணையில் விலையுயர்ந்த ஒரு வகை கற்சிலையின் பாகங்கள் மற்றும் பித்தளை பொருட்கள் ஆகியன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கடவத்த பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## பல்கலை பாதுகாப்பு உத்தியோகத்தரை தாக்கிய 04 மாணவர்கள் இடைநிறுத்தம்

கொழும்பு, டிசெ. 06

களனி பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தரை தாக்கிய சம்பவம் தொடர்பில் 04 பல்கலைக்கழக மாணவர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த சம்பவம் குறித்து விசாரணைகளை நடத்துவதற்கு 2 குழுக்கள் நியமிக்கப்படும் என பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது. களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனைய அனைத்து பீடங்களும் நேற்று முன்தினம் முதல் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன. (அ)

## மின்சாரம் துண்டிக்க சென்ற ஊழியர்கள் மீது தாக்குதல்!

கொழும்பு, டிசெ. 06

கம்பஹா பிரதேசத்தில் மின்சாரத்தை துண்டிக்க சென்ற இரண்டு மின்சார சபை ஊழியர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த இரண்டு மின்சார சபை ஊழியர்களும் சிகிச்சைக்காக கம்பஹா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

தாக்குதலை மேற்கொண்ட சந்தேக நபர்கள் தொடர்பான விசாரணைகளை கம்பஹா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## காணித் தகராறின்போது சகோதரியைக் கத்தியால் தாக்கி காயப்படுத்திய பொலிஸ் கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு, டிசெ. 06

காணித் தகராறு காரணமாக ஏற்பட்ட வாக்குவாதத்தில் தனது சகோதரியை கத்தியால் தாக்கிக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பல்லம பொலிஸாரால் கைது செய்யப்பட்டாளார்.

நுரைச்சோலை பொலிஸில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

பள்ளம, திம்பிரிகொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த தனது சகோதரியுடன் ஏற்பட்ட காணித் தகராறு காரணமாக பொலிஸ் கான்ஸ்டபிளால் அவர் தாக்கப்பட்டுக் காயமடைந்துள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் கான்ஸ்டபிளால் தாக்கப்பட்ட அவரது சகோதரி சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஷாய் ஹோப் அதிரடி சதம் மேற்கிந்திய தீவுகள் வெற்றி!



அன்டிகுவா, டிசெ. 06

இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 326 ஓட்டங்கள் இலக்கை வெற்றிகரமாக துரத்தியது மேற்கு இந்தியத் தீவுகள் அணி. அணித் தலைவர் ஷாய் ஹோப் 109 ஓட்டங்கள் விளாசி அணியின் வெற்றிக்கு முக்கிய பங்களிப்பை வழங்கி னார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி மேற்கு இந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இரு அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டி அன்டிகுவாவில் நடைபெற்றது.

முதலில், துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 325 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக ஹாரி புருக் 72 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 7 பௌண்ட்ரிளுடன் 71 ஓட்டங் கள் சேர்த்தார். ஸாக் கிராவ்லி 48, பில் சால்ட் 45, சாம் கரண் 38, பிரைடன் கார்ஸ் 31, வில் ஜேக்ஸ் 26 ஓட்டங்கள் சேர்த்தனர்.

மேற்கு இந்தியத் தீவுகள் அணி சார்பில் ரொமாரியோ ஷெப்பர்ட், குடகேஷ் மோதி, ஓஷேன் தாமஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

326 ஓட்டங்கள் இலக்குடன் பேட் செய்த மேற்குஇந்தியத் தீவுகள் அணி 48.5 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 326 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. தனது 16ஆவது சதத்தை விளாசிய அணித்தலைவர் ஷாய் ஹோப் 83 பந்துகளில், 7 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகளுடன் 109 ஓட்டங்கள் விளாசி ஆட்ட மிழக்காமல் இருந்தார்.

அலிக் அத்தானாஸ் 66, பிரண்டன் கிங் 35, கீசி கார்ட்டி 16, ஷிம்ரன் ஹெட்மயர் 32, ஷேர்பான் ரதர்போர்டு 6, ரொமாரியோ ஷெப்பர்ட் 48, அல்ஸாரி ஜோசப் 2 ஓட்டங்கள் சேர்த்தனர்.

பந்து வீச்சில் இங்கிலாந்து அணி தரப்பில் கஸ் அட்கின்சன், ரேஹான் அகமது ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

ஒருகட்டத்தில் மேற்கு இந்தியத் தீவுகள் அணி 39 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 213 ஓட்டங்கள் சேர்த்து நெருக்கடியை சந் தித்தது.

கடைசி 11 ஓவர்களில் வெற்றிக்கு 113 ஓட்டங்கள் தேவையாக இருந்த நிலையில் ஷாய் ஹோப்புடன் இணைந்து ரொமாரியோ ஷெப்பர்ட் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ரொமா ரியோ ஷெப்பர்ட் 28 பந்துக ளில் விளாசிய 48 ஓட்டகளும் ஷாய் ஹோப்பின் சதமும் மேற்கு இந்தியத் தீவுகள் அணியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தன.

(ஐ)




# மோசமான சாதனை படைத்த சாம் கரன்!

அன்டிகுவா, டிசெ. 06

மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையேயான முதல் ஒருநாள் போட்டி அன்டிகுவாவில் நடந்தது. இதில், முதலில் ஆடிய இங்கிலாந்து அணி 325 ஓட்டங்கள் குவித்தபோதும், பந்துவீச்சில் கோட்டை விட்டதால் தோல்வியடைந்தது.

இதில், இங்கிலாந்து பந்து வீச்சாளர் சாம் கரன் 9.5 ஓவர்கள் வீசி, 98 ஓட்டங்கள் கொடுத்தார். குறிப்பாக கடைசி நேரத்தில் 45 மற்றும் 49ஆவது ஓவர்களில் முறையே 15, 19 ஓட்டங்களை கொடுத்தார். இது மேற்கிந்தியாவின் வெற்றியை இலகுவாக்கியது.

இதன்மூலம் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் அதிக ஓட்டங்களை வழங்கிய இங்கிலாந்து பந்துவீச்சாளர் என்ற மோசமான சாதனையை சாம் கரன் படைத்துள்ளார்

இதற்கு முன்பு 2006இல் இலங்கைக்கு எதிரான போட்டியில் ஸ்டீவ் ஹார்மிசன் 10 ஓவர்களில் 97 ரன்கள் விட்டுக் கொடுத்ததே மோசமான சாதனையாக இருந்தது.

ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் விட்டுக் கொடுத்த இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள் விவரம்:

சாம் கரன் : 9.5 ஓவர்களில் 98 ஓட்டங்கள்

ஸ்டீவ் ஹார்மிசன் : 10 ஓவர்களில் 97 ஓட்டங்கள்

கிறிஸ் ஜோர்டான் : 9 ஓவர்களில் 97 ஓட்டங்கள்)

ஜேக் பால் : 10 ஓவர்களில் 94 ரன்கள்

ஜேம்ஸ் அண்டர்சன்: 10 ஓவர்களில் 91 ஓட்டங்கள்

ஜேம்ஸ் அண்டர்சன்: 9.5 ஓவரில் 91 ஓட்டங்கள்

லியொம் பிளங்கட் : 10 ஓவர்களில் 91 ஓட்டங்கள்

கிறிஸ் வோக்ஸ் : 10 ஓவர்களில் 91 ஓட்டங்கள்.

# இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடர் சவாலானது!



பெங்களூர், டிசெ. 06

இங்கிலாந்து அணி அடுத்த ஆண்டு ஜனவரியில் இந்தியா சென்று 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. ஜனவரி 25ஆம் திகதி தொடங்கும் இந்தத் தொடரின் போட்டிகள் ஹைதராபாத், விசாகப்பட்டினம், ராஜ்கோட்,ராஞ்சி, தரம்சாலா மைதானங்களில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் இங்கிலாந்து அணி பயிற்றுநர் பிரண்டன் மக்கலம் பெங்களூரில் பங்கேற்ற நிகழ்வில் கூறுகையில்,

இந்தியாவில் நடைபெறவுள்ள டெஸ்ட் தொடர் இங்கிலாந்து அணிக்கு மிகவும் முக்கியமானதாகும். இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட அணுகுமுறையை ‘பேஸ்பால்’ முறை மாற்றியுள்ளது. போட்டியில் வெற்றியோ, தோல்வியோ அதைப் பொருட்படுத்தாமல் எங்கள் அணி ‘பேஸ்பால்’அணுகுமுறையைத் தொடரும்.

தாக்குதல் ஆட்டத்திறனான “பேஸ்பால்“ அணுகுமுறையால் கடந்த சில தொடர்களாக இங்கிலாந்து அணியின் ஆட்டத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தியாவுக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட தொடரிலும் இங்கிலாந்தின் ஆக்ரோஷ ஆட்டம் தொடரும்.

‘பேஸ்பால்’ அணுகுமுறையிலிருந்து நாங்கள் மாறமாட்டோம்.

இந்திய ஆடுகளங்களில் பந்துகள் அதிகம் திரும்பும். அதைப்பற்றி நாங்கள் கவலைப்படப் போவதில்லை. இங்கிலாந்து அணியின் ‘பேஸ்பால்’ அணுகுமுறையை தொடர்ந்து இந்தத் தொடரிலும் செயல்படுத்துவோம். இந்தியாவில் நடைபெறும் இந்தத் தொடர்இங்கிலாந்து அணிக்கு நிச்சயம் சவாலாக இருக்கப் போகிறது. அதில் எந்த சந்தேகமும் இல்லை.

இந்தியாவுக்கு எதிரான தொடரில் செயலாற்றுவதற்காக நான் உற்சாகமாக இருக்கிறேன். டெஸ்ட் போட்டிகளில் சிறந்த அணிகளுள் ஒன்றாக இந்திய அணி இருக்கிறது. எனவே, அந்த அணிக்கெதிரான எங்களது அணுகுமுறையை சோதித்துப் பார்க்க நாங்கள் விரும்புகிறோம். இந்தத் தொடரில் வெற்றி பெற்றால் நாங்கள் உற்சாகமாக இருப்போம். ஒருவேளை தோல்வி கண்டால், அதைப் பற்றி கவலைப்படப் போவதில்லை.

நாங்கள் நல்ல கிரிக்கெட்டை விளையாடுகிறோம். எங்களால் முடிந்தவரை கிரிக்கெட்டில் சிறந்து விளங்க முயற்சி செய்ய விரும்புகிறோம். நாங்கள் சில தொடர்களில் உடனடி வெற்றிகளைப் பெற்றதால் நாங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். ஆனால், அதுவே எங்கள் அணியின் உச்சபட்ச வெற்றி என்று நான் நினைக்கவில்லை.

எனது முதல் ஐ. பி. எல். போட்டியில் 73 பந்துகளில் 158 ஓட்டங்கள் குவித்தேன். அன்றைய தினத்தில் களத்தில் பயப்படாமல் விளாசினேன். இந்த வகை தாக்குதல் ஆட்டம் ‘பேஸ்பால்’ அணுகுமுறையிலான ஆட்டம்தான் - என்றார். (ஐ)

# இந்தியாவுடனான தொடர்கள் தெ. ஆபிரிக்க அணி அறிவிப்பு



ஜொகன்னஸ்பேர்க், டிசெ. 06

இந்திய கிரிக்கெட் அணி இந்தவார இறுதியில் தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கிறது. அங்கு 3 இருபது- 20 போட்டி, 3 ஒருநாள் போட்டி, 2 டெஸ்ட் தொடர்களில் விளையாட உள்ளது.

இதில் இருபது- 20 கிரிக்கெட் தொடரின் முதல் ஆட்டம் வரும் 10ஆம் திகதி டர்பன் நகரில் நடைபெறுகிறது. 2ஆவதுஆட்டம் 12ஆம் திகதி கெபெர்ஹாவிலும், கடைசி மற்றும் 3ஆவது இருபது - 20 போட்டி 14ஆம் திகதி ஜொகன்னஸ்பேர்க்கிலும் நடைபெறவுள்ளன.

இதைத் தொடர்ந்து ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் முதல் ஆட்டம் மே17 ஆம் திகதி ஜொகன்னஸ் பேர்க்கில் நடைபெறுகிறது. 2ஆவது போட்டி 19ஆம் திகதி கெபெர்ஹாவிலும், கடைசி மற்றும் 3ஆவது போட்டிபார்ல் நகரிலும் நடைபெறுகிறது. முதல் டெஸ்ட் போட்டி 26ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை செஞ்சூரியன் நகரிலும், 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி ஜனவரி 3ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை கேப்டவுன் நகரிலும் நடை பெறுகிறது.

அணிகள் விவரம்:

**இருபது - 20:**

எய்டன் மார்க்ரம் (அணித் தலைவர்), ஒட்னியேல் பார்ட்மன், மத்தியூ ப்ரீட்ஸ்கே, நந்த்ரே பர்கர், ஜெரால்ட் கோட்ஸி (முதல் இரு இருபது- 20 போட்டி), டோனோவன் ஃ பெரைரா, ரீசா ஹென்ட்ரிக்ஸ், மார்கோ யான்சன் (முதல் இரு ரி -20 போட்டி), ஹெய்ன்ரிச் கிளாசன், கேசவ் மகராஜ், டேவிட் மில்லர், லுங்கி நிகிடி (முதல் இரு ரி -20 போட்டி), அன்ரில் பெலுக்வாயோ, தப்ரைஸ் ஷம்சி, டிரிஸ்டன் ஸ்டப்ஸ், லிசாத் வில்லியம்ஸ்.

ஒருநாள் போட்டி -

எய்டன் மார்க்ரம் (அணித்தலைவர்), ஒட்னியேல் பார்ட்மன், நந்த்ரே பர்கர், டோனி டி சோர்ஸி, ரீசாஹென்ரிக்ஸ், ஹெய்ன்ரிச் கிளாசென், கேசவ் மகராஜ், மிஹ்லாலி பொங்வானா, டேவிட் மில்லர், வியான் முல்டர், ஆண்டில் பெலுக்வாயோ, தப்ரைஸ் ஷம்சி, ராஸ்ஸி வான் டெர் டுஸன், கைல் வெர்ரைன், லிசாத் வில்லியம்ஸ்.

**டெஸ்ட் போட்டி:**

தெம்பா பவுமா (அணித் தலைவர்), டேவிட் பெடிங்ஹாம், நந்த்ரே பர்கர், ஜெரால்ட் கோட்ஸி, டோனி டி ஜோர்சி, டீன் எல்கர், மார்கோ யான்சன், கேசவ் மகராஜ், எய்டன் மார்க்ரம், வியான் முல்டர், லுங்கி நிகிடி, கீகன் பீற்றர்சன், காகிசோ ரபாடா, டிரிஸ்டன் ஸ்டப்ஸ், கைல் வெரைன்.

# காலிஸ்தான் ஆதரவாளர் நிஜ்ஜார் கொலை பற்றி அமெரிக்கா முன்பே எச்சரித்ததா? என்ன நடந்தது?











வட அமெரிக்காவில் குறைந்தது நான்கு சீக்கிய பிரிவினைவாதிகளை கொல்லச் சதி செய்ததாக இந்தியர் ஒருவர் மீது அமெரிக்க அரசு குற்றம் சாட்டியுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு, இந்த ஆண்டு தொடக்கத்தில் கனடா நாட்டு குடிமகனும் காலிஸ்தான் ஆதரவாளருமான ஹர்தீப் சிங் நிஜ்ஜாரின் கொலை வழக்கோடு தொடர்புபடுத்தப்படுகிறது. மேலும், இந்தக் குற்றச்சாட்டின் விளைவாக நிஜ்ஜார் கொலை செய்யப்படுவதற்கு முன்பு அது குறித்து அமெரிக்க உளவு அதிகாரிகளுக்கு என்ன தெரியும் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

ஜூன் 18 அன்று, நிகில் குப்தா கனடாவில் தனது காரில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட சீக்கிய பிரிவினைவாதத் தலைவரான ஹர் திப் சிங் நிஜ்ஜாரின் வீடியோவை பார்த்தார். அவரது ரத்தம் தோய்ந்த உடல் ஸ்டீயரிங் மீது சரிந்தது.

குப்தா அந்த வீடியோவை வேறொருவருக்கு அனுப்பினார். வேறொரு நாட்டில் வைத்து வேறொரு நபரைக் கொலை செய்வதற்காக அந்த நபரை குப்தா பணியமர்த்தினார் என்று குப்தா மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அதே நபரிடம் அடுத்த நாள் தொலைபேசியில் பேசிய குப்தா, கொலை செய்யப்பட்ட நபர் ஒரு ‘டார்கெட்’ என்று கூறியதாகவும் “நமக்கு நிறைய டார்கெட்கள் இருக்கிறார்கள். இப்போது உள்ள நல்ல செய்தி என்னவென்றால் நாம் எதற்கும் காத்திருக்க வேண்டியதில்லை என்பது தான்,” எனவும் தெரிவித்ததாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

**நிஜ்ஜார் கொலை குறித்து அமெரிக்காவுக்கு முன்பே தெரியுமா?**

அமெரிக்க வழக்குரைஞர்களால் வெளியிடப்பட்ட குற்றப்பத்திரிக்கையில், நடந்ததாகக் கூறப்படும் அந்த உரையாடல்கள் புதன்கிழமையன்று இடம்பெற்றுள்ளது.

நியூயார்க்கை சேர்ந்த அமெரிக்க-கனடிய குடியுரிமை உள்ள ஒருவரை படுகொலை செய்ய விரிவான சதித்திட்டம் தீட்டியதாக அமெரிக்க நீதித்துறை குப்தா மீது குற்றம் சாட்டியுள்ளது. இந்திய அரசாங்க அதிகாரி ஒருவர் தான் இதற்குப் பின்னணியில் இருக்கிறார் என்றும் குற்றச் சாட்டு எழுந்துள்ளது.

அமெரிக்க அரசு வழக்கறிஞர்கள் அந்த நபரின் பெயரைக் குறிப்பிடப்படவில்லை என்றாலும், அமெரிக்க ஊடகங்கள் சீக்கிய பிரிவினைவாத குழுவின் உறுப்பினரான குர்பத்வந்த் சிங் பன்னு என்பவரைத்தான் கொலை செய்யத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளன.

அந்த நபரைக் கொலை செய்வதற்காக நியூயார்க்கை சேர்ந்த ஒருவருக்கு குப்தா ஒரு லட்சம் டொலர் கொடுக்க ஒப்புக்கொண்டார். ஆனால், அந்த நபர் அமெரிக்க அரசின் உளவு அதிகாரி. இதன் மூலமாகத்தான் அந்தக் கொலை முயற்சி தடுக்கப்பட்டதாக குற்றப் பத்திரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் ஹர்திப் சிங் நிஜ்ஜார் கொலை செய்யப்பட்டது குறித்தும் சில புதிய தகவல்கள் இந்த குற்றப் பத்திரிக்கையில் இடம் பெற்றுள்ளன. இதனால் நிஜ்ஜார் கொலை செய்யப்படுவது குறித்து அமெரிக்காவுக்கு முன்பே தெரியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

சீக்கியர்களுக்கான தனிநாடு அமைப்பதற்கு பிரசாரம் செய்த 45 வயது செயற்பாட்டாளரான நிஜ்ஜார் கொல்லப்பட்ட சம்பவம் கனடாவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

சில மாதங்களுக்குப் பிறகு செப்டம்பரில், கனடாவின் பிரதம மந்திரி ஜஸ்டின் ட்ரூடோ, இந்தியா இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டிருப்பதாக கூறியபோது, இந்தக் கொலை வெளியுறவு பிரச்னையாக மாறியது.

ட்ரூடோவின் குற்றச்சாட்டை இந்தியா “அபத்தமானது” என்று நிராகரித்தது. இரு நாடுகளுக்கும் இடையே வளர்ந்து வரும் பிளவை இந்த விவகாரம் விரிவுபடுத்தியது. பிரதமர் ட்ரூடோ தனது குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டிய அழுத்தத்திற்கும் ஆளானார்.

கடந்த புதன்கிழமையன்று பேசிய ட்ரூடோ, கனடாவின் குற்றச்சாட்டுகளை இந்தியா தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தைத் தற்போது அமெரிக்காவின் குற்றச்சாட்டுகள் வலியுறுத்துவதாகக் கூறினார்.

அமெரிக்காவின் குற்றச்சாட்டு ட்ரூடோவின் கூற்றுகளுக்கு வலு சேர்த்துள்ளதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

“செப்டம்பரில் ட்ரூடோ கூறியதைவிட இன்றைய ஆதாரம் நிறைய சொல்கிறது” என்று ஒட்டாவாவில் உள்ள கார்லேடன் பல்கலைக் கழகத்தின் சர்வதேச விவகாரங்களின் பேராசிரியரான ஸ்டெபானி கார்வின் கூறினார்.

அவர் கூறுகையில், ‘கனடாவில் மூன்று நபர்களைக் கொல்வதற்கான சதித் திட்டம் இருந்ததை இது தெளிவாக்குகிறது. நிஜ்ஜார் கொல்லப்பட்டது ஒற்றைச் சம்பவம் கிடையாது,” என்று அவர் கூறினார்.

ட்ரூடோவின் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்த போது கனடாவிற்கு ஆதரவு தெரிவித்தோ அல்லது இந்தியாவை கண்டித்தோ அமெரிக்கா எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

**‘கனடாவில் ஒரு பெரிய இலக்கு உள்ளது’**

குப்தா, 2023ஆம் ஆண்டு மே மாதம் இந்திய அரசாங்க அதிகாரி ஒருவரால் படுகொலைக்கு ஏற்பாடு செய்யப்படுவதற்கு முன்னர் சர்வதேச போதைப்பொருள் மற்றும் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டதாக அமெரிக்க அதிகாரிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

நிஜ்ஜாரின் கூட்டாளிதான் பன்னூன். நிஜ்ஜாரை போலவே பன்னூனும் இந்தியாவால் பயங்கரவாதியாக அறிவிக்கப்பட்டுள்ளார். ஆனால், அவர்கள் இருவரும் இந்தக் குற்றச் சாட்டை மறுத்தனர்.

பல வாரங்களாக, குப்தா, பன்னூனை கண்காணித்து, இந்திய அரசு ஊழியரின் உத்தரவுகளைப் பின்பற்றினார் என்று அமெரிக்கா கூறுகிறது.

மேலும், அமெரிக்காவின் குற்றப் பத்திரிக்கையில் ஜூன் 12ஆம் தேதி கனடாவில் ஒரு பெரிய டார்கெட் இருப்பதாக குப்தா அமெரிக்காவின் உளவு அதிகாரியிடம் தெரிவித்ததாகக் கூறப்பட்டுள்ளது.

அவர் கூறி, ஆறு நாட்களுக்குப் பிறகு, ஜூன் 18 அன்று, கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள சர்ரே யில் உள்ள சீக்கிய கோவிலுக்கு வெளியே நிஜ்ஜார் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கனடாவின் தேசிய பொலிஸ் படை நிஜ்ஜாரின் மரணத்தை இன்னும் தீவிரமாக விசாரித்து வருகிறது. மேலும் அமெரிக்க குற்றச்சாட்டு குறித்து கனடா எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

குப்தாவும் இந்திய அதிகாரியும் சேர்ந்துதான் இந்தக் கொலையைச் செய்தார்கள் என்று அமெரிக்க வழக்கறிஞர்கள் குற்றம் சாட்டவில்லை. ஆனால் கொலை குறித்து இருவரும் பேசியதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

குற்றப்பத்திரிகையின் படி, தனிப்பட்ட முறையில் தானே அந்தக் கொலையைச் செய்திருக்க விரும்புவதாக குப்தா இந்திய அரசாங்க ஊழியரிடம் கூறியதாகவும் கொலை நடந்தவுடன் அமெரிக்க உளவு அதிகாரியை அழைத்து, தான் கூறிய கனடாவில் இருந்த இலக்கு கொலை செய்யப்பட்ட நிஜ்ஜார் தான் என்று கூறியதாகவும் குற்றப் பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், நீதிமன்ற ஆவணங்களின்படி, நிஜ்ஜாரின் கொலை குப்தாவை தூண்டியது. பன்னூனின் கொலை “விரைவாக” செய்யப்பட வேண்டும் என்று அவர் அமெரிக்க உளவு அதிகாரியிடம் கூறினார். அது முடிந்த பிறகு, ஜூன் மாத இறுதிக்குள் இன்னும் மூன்று ‘வேலைகள்” செய்ய வேண்டியிருப்பதாக குப்தா கூறியதாக குற்றப்பத் திரிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**அமெரிக்கா நிஜ்ஜாரின் கொலை குறித்து கனடாவை எச்சரித்ததா?**

புதன்கிழமை குற்றப்பத்திரிகையில் சேர்க்கப்பட்டுள்ள விவரங்கள் நிஜ்ஜார் உட்பட கனடாவில் இருக்கக்கூடியவர்களுக்கு இருக்கும் அச்சுறுத்தல்கள் குறித்துப் புதிய கேள்விகளை எழுப்பியுள்ளன.

நிஜ்ஜார் கொல்லப்படுவதற்கு முன்னதாகவே அவரது உயிருக்கு ஆபத்து இருப்பதாக கனடாவின் சட்ட அமுலாக்க அதிகாரிகள் எச்சரித்ததாக கூறப்படுகிறது.

ஆனால் கனடா குடிமக்களுக்கு ஏற்படவிருந்த அச்சுறுத்தல் குறித்து ரகசிய நடவடிக்கையின் மூலம் தகவல்களைச் சேகரித்த அமெரிக்க உளவுத்துறையால் எந்த அளவுக்கு கனடாவிற்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டது என்பது குறித்து தெளிவாகத் தெரியவில்லை.

பன்னூன் வழக்கை ஒப்பிடும்போது, நிஜ்ஜாரின் விஷயத்தில், நம்பகத்தன்மையுடன் செயல்படக்கூடிய விவரங்கள் குறைவாக இருப்பதாக சர்வதேச ஆளுகை கண்டுபிடிப்பு மையத்தைச் சேர்ந்த வெஸ்லி வார்க் பிபிசியிடம் கூறினார்.

சதி தொடர்பாக அமெரிக்கா எழுப்பிய பாதுகாப்பு சம்பந்தமான கவலைகள் குறித்து விசாரணையைத் தொடங்கியுள்ளதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது.

ஆனால் அமெரிக்காவோ இந்தியாவோ தங்களின் வளர்ந்து வரும் ராஜ்ஜீய உறவை குறைத்துக்கொள்ள விரும்பவில்லை என்று சர்வதேச விவகார நிபுணர் பேராசிரியர் கார்வின் கூறினார்.

“இதை முடிந்தவரை அமைதியாகவும் விரைவாகவும் தீர்த்துக்கொள்ள வாஷிங்டனில் இருந்து டெல்லிக்கு நிறைய அழைப்புகள் வந்ததாக நான் உறுதியாகச் சந்தேகிக்கிறேன்,” என்று அவர் கூறினார்.

# தேசிய நல்லிணக்கத்துக்கு பாதகமான முறையில் அதிகரிக்கும் நம்பகத்தன்மை இடைவெளி



கலாநிதி ஜெகான் பெரேரா

சிறுபான்மை இனத்தவர்கள் பெரும்பாலும் பெரும்பான்மை இனத்தவரின் அதிகாரத்தில் ஐயம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். கலவரங்கள் போன்றவற்றின் வடிவில் சிறுபான்மையினர் மீது பெரும்பான்மையினர் வன்முறையை கட்டவிழ்த்துவிடலாம். சிறுபான்மையினர் அதை எதிர்க்கலாம் என்றாலும் இறுதியில் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் அவர்களாகவே இருக்கிறார்கள்.

முக்கியமானவை எவை என்று பெரும்பான்மையினர் கொண்டிருக்கும் கருத்து தங்களுக்கு முக்கியமானவை எவை என்று சிறுபான்மையினர் கருதுகின்றவற்றுக்கு மேலாக முன்னுரிமை பெறுவதால் ஜனநாயகங்களில் சிறுபான்மையினர் பெரும்பாலும் பெரும்பான்மையினரின் ஆட்சிப் பிரச்சினையை எதிர்நோக்குகிறார்கள்.

அதனால் சிறுபான்மை இனத்தவர்களைப் பொறுத்தவரை அவர்கள் சமத்துவமானவர்களாக நடத்தப்படுவதற்கு சட்டத்தின் ஆட்சி மற்றும் நியாயம் தொடர்பிலான கோட்பாடுகள் அவர்களுக்கு மிகவும் முக்கியமானவையாக இருக்கின்றன.

பெரும்பான்மையினத்தவரின் கொடுங்கோன்மை குறித்து எச்சரிக்கை செய்த 19 ஆம் நூற்றாண்டின் அரசியல் தத்துவவாதி ஜோன் ஸ்ருவர்ட் நீண்டகால நோக்கில் ஒரு அரசின் மதிப்பு என்பது அதில் உள்ளடங்கியிருக்கும் தனிமனிதர்களின் மதிப்பாகும் என்று கூறினார்.

நிறுவன ரீதியான பாதுகாப்புகளின் ஊடாக சமத்துவத்தையும் நீதியையும் உறுதிப்படுத்துவது சகல குடிமக்களுக்குமான ஜனநாயக கோட்பாடுகளை போற்றிப்பேணுவதற்கு மிகவும் முக்கியமானதாகிறது. இலங்கையின் அண்மைக்கால நிகழ்வுப்போக்குகள் இன, மத சிறுபான்மை இனத்தவர்கள் மத்தியில் எதிர்காலம் பற்றிய அச்சவுணர்வை அதிகரிக்கின்றன.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பில் கத்தோலிக்க திருச்சபைக்கு இருக்கும் கவலைகள் அலட்சியம் செய்யப்படுதல், கிறிஸ்தவ மதபோதகர் ஜெரோம் பெர்னாண்டோ கைது மற்றும் அரசியலமைப்பு பேரவைக்கான தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் நியமனத்துக்கு எதிர்ப்பு ஆகியவையும் அந்த அச்சவுணர்வில் அடங்கும்.

போதகர் ஜெரோமின் கைது ஒரு சிறிய பிரச்னையாக



அதாவது ஏனைய மதங்களைப் பற்றி குறிப்பாக பெரும்பான்மை இனத்தவரின் மதத்தைப்ப பற்றி தனிநபர் ஒருவர் அநாவசியமாக பேசிய ஒரு பிரச்சினையாக தோன்றலாம். ஆனால் அவர் மத வெறுப்புணர்வை பரப்பியதாக அரசியல் மற்றும் குடியியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பது அரசாங்கம் பெரும்பான்மைச் சமூகத்தை நடத்துவதிலும் பார்க்க தங்களை மிகவும் கடுமையாக (சமத்துவமாக நடத்தப்படுவதற்கான கோட்பாட்டை மீறும் வகையில்) நடத்துகிறது என்ற செய்தியை சகல சிறுபான்மை இனத்தவர்களுக்கும் மதத்தவர்களுக்கும் கொடுக்கிறது.

போதகர் ஜெரோம் பிரதானபோக்கு கிறிஸ்தவ திருச்சபைகளினால் கூட சர்ச்சைக்குரியவர்கள் என்று நோக்கப்படுகின்ற சிறிய எண்ணிக்கையானோரைக் கொண்ட விவிலிய கிறிஸ்தவ குழுவைச் சேர்ந்தவர். ஆனால் அவர் கைது செய்யப்பட்ட சூழ்நிலை இன, மத சிறுபான்மை இனத்தவர்கள் தொடர்பில் அரசாங்கம் மாற்றாந்தாய் மனநிலையைக் கொண்டிருக்கிறது என்பதை காட்டுகிறது.

போதகர் ஜெரோம் நாடுதிரும்பும்போது கைதுசெய்யப்படமாட்டார் என்று மேல்நிலை நீதிமன்றத்தின் உத்தரவைப் பெற்றுக்கொண்டதற்கு மத்தியிலும் அவர் கைதுசெய்யப்பட்டார்.

அரசாங்கம் முன்னரும் கூட நீதிமன்றங்களின் உத்தரவுகளை மீறிச்செயற்படுவதில் நாட்டம் காட்டியிருந்தது. உள்ளூராட்சி தேர்தல்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை நிறுத்திவைக்கக்கூடாது என்று உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அரசாங்கம் மதித்துச் செயற்படவில்லை.

இந்தப் போக்கு சட்டம் சகலரையும் சமத்துவமான முறையில் பாதுகாக்கிறது என்ற அடிப்படையில் மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட பல்வேறு “நல்லிணக்கப் பொறிமுறைகள்” முன்னெடுத்த நல்ல பணிகளுக்கு பாதிப்பாக அமைகிறது.

### சமச்சீரற்ற நீதி

தனது மதத்தின் தாபகரே ஏனைய மதங்களின் தாபகர்கள் எல்லோருக்கும் முன்மாதிரியானவர் என்று கூறியதன் மூலம் பெரும்பான்மை மதத்தவர்களின் உணர்வுகளைப் புண்படுத்தினார் என்பதே போதகர் ஜெரோமுக்கு எதிரான பிரதான குற்றச்சாட்டாகும். அதன் பிரகாரம், மதங்களுக்கு இடையில் அமைதியின்மைக்கு வழிவகுத்த பாதகமான கருந்துக்களை கூறினார் என்ற குற்றச்சாட்டில் அவர் குற்றவியல் விசாரணை திணைக்களத்தினால் (சி.ஐ.டி.) கைதுசெய்யப்பட்டார்.

போதகர் ஜெரோம் தனக்கு சொந்தமான “அதிசய மாடத்தில்” (ஆசையஉடந ஹுழஅந) நிகழ்த்திய பிரசங்கத்தின் மூலம் அரசியல் மற்றும் குடியியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைச் சடடத்தின் கீழ் குற்றத்தை செய்திருக்கிறார் என்பதைக் காண்பிக்கும் போதுமான விபரங்கள் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக மாஜிஸ்திரேட் குறிப்பிட்டிருந்தார்.

போதகரின் கருத்துக்கள் பௌத்தர்களுக்கும் ஏனைய மதங்களைப் பின்பற்றுபவர்களுக்கும் இடையில் பதற்றத்தை தோற்றுவித்ததாகவும் வழக்குத்தொடுநரினால் விபரங்கள் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டதாகவும் மாஜிஸ்திரேட் கூறினார்.

மறுபுறத்தில், வணக்கத்துக்குரிய பௌத்த பிக்கு ஒருவர் நடத்தப்பட்ட முறையையும் விட போதகர் ஜெரோம் நடத்தப்பட்ட முறை மிகவும் கடுமையானதாக இருக்கிறது.

தமிழ்ச் சமூகத்தை அச்சுறுத்தும் வகையில் கருத்துக்களைக் கூறிய வண. சுமணரத்ன தேரருக்கு எதிராக பொலிசார் நடவடிக்கை எடுக்காதது குறித்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கேள்வியெழுப்பினார். தேரருக்கு எதிராக பொலிசார் உடனடியாக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவர் பாராளுமன்றத்தில் கேட்டார்.

அதேவேளை, சுமணரத்ன தேரர் இனவெறுப்பையும் வன்முறையையும் தூண்டியதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரான மனோ கணேசனும் குற்றஞ்சாட்டினார். தெற்கில் வாழும் ஒவ்வாரு தமிழனையும் துண்டுதுண்டாக வெட்டப்போவதாக தேரர் பேசியது அரசியல் மற்றும் குடியியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைச் சட்டத்தை மீறுவதாக இல்லையா என்று ஜனாதிபதியை நோக்கி கணேசன் கேள்வியழுப்பினார்.

சிறுபான்மை இனத்தவர்களின் உணர்வுகளை அரசாங்கம் அவமதித்த வேறு இரு முக்கிய சம்பவங்களையும் இங்கு சுட்டிக்காட்டவேண்டும்.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்று நான்கு வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துவிட்ட நிலையிலும் அது தொடர்பில் இதுவரையில் முறையான விசாரணை நடத்தப்படவில்லை. இதை சுட்டிக்காட்டிய பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் உண்மையையும் நீதியையும் தேடும் முயற்சிகளைக் கைவிடவேண்டாம் என்று கத்தோலிக்க திருச்சபையை வலியுறுத்திக் கேட்டிருந்தார்.

இந்த விவகாரம் குறித்து அரசாங்கங்கள் விசாரணைக் குழுக்களை நியமித்தன. தற்போதைய அரசாங்கமும் அவ்வாறு செய்வதாக உறுதியளித்த போதிலும், குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க எந்த முன்னேற்றமும் இல்லை.

குண்டுத்தாக்குதல்களில் இருந்து மக்களைப் பாதுகாப்பதில் தங்களது கடமையைச் செய்யத்தவறியதாக விசாரணை குழுக்களின் அறிக்கைகளில் பெயர் குறிப்பிப்பட்டவர்கள் இன்னமும் கூட பதவிகளில் இருப்பது மாத்திரமல்ல பதவியுயர்வுகளையும்பெறுகிறார்கள்.

வெறைற் றிசேர்ச் நிறுவனத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பு ஒன்று 2019 ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களில் உள்நாட்டு அரசியல் சக்திகளுக்கு தொடர்பு இருப்பதாக இலங்கை மக்களில் அரைவாசிக்கும் அதிகமானவர்கள் (53 வீதம்) நம்புவதாக கூறுகிறது.

### தொலைதூரக் கனவு

அரசியலமைப்பு பேரவையில் நிரப்பப்படாமல் இருக்கும் வெற்றிடம் தொடர்பில் காண்பிக்கப்படும் அலட்சியம் அல்லது நிராகரிப்பு சிறுபான்மை இனத்தவர்களின் உணர்வுகளை பாதித்திருக்கும் இன்னொரு பிரச்னையாகும்.

அரசியலமைப்பு பேரவையே நாட்டின் மிகவும் அதியுயர்ந்த மேற்பார்வை அமைப்பாகும். மேல்நிலை நீதித்துறை, தேர்தல் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, தேசிய கணக்காய்வு ஆணைக்குழு, பொதுச்சேவை ஆணைக்குழு மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு போன்ற முக்கியமான சக்திமிக்க அரச நிறுவனங்களுக்கு நேர்மைகொண்ட சுயாதீனமான நபர்கள் மாத்திரம் நியமிக்கப்படுவதை உறுதிசெய்வதே அரசியலமைப்பு பேரவையின் பணியாகும்.

ஆனால், பாராளுமன்றத்தில் உள்ள மூன்றாவது மிகப் பெரிய கட்சி என்ற வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் நிரப்பப்படவேண்டிய அரசியலமைப்பு பேரவை வெற்றிடம் இன்னமும் நிர்ப்பப்படவில்லை. பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாக வேறு கட்சிகளும் உரிமை கோருகின்றன என்ற சந்தேகத்துக்கிடமான காரணத்தைக் காட்டி தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு அந்த வெற்றிடத்தை நிரப்பும் வாய்ப்பு கொடுக்கப்படாமல் இருக்கிறது.

அரசிலயமைப்பு பேரவையில் முட்டுக்கட்டை நிலையொன்று இருக்கிறது. அதைப் பற்றி எல்லோருக்கும் தெரியும் என்று பாராளுமன்றத்தில் கடந்தவாரம் சுமந்திரன் கூறினார்.

“ஒரு ஆசனம் வெற்றிடமாக இருப்பதால் முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டிருக்கிறது. அது நிரப்பப்பட்டிருந்தால் அந்த நிலை ஏற்பட்டிருக்காது. இந்த நாட்டில் சகலரும் சமத்துவமானவர்கள் என்றும் சகலருக்கும் சமத்துவமான பிரதிநிதித்துவம் இருக்கிறது என்றும் தாராளமாக நீங்கள் பேசுகின்ற அதேவேளை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அமைப்பான அரசியலயமைப்பு பேரவையில் எங்களுக்குரிய இடத்தை இன்னமும் நிராகரிக்கிறீர்கள். இது ஏன் என்பதை நாடு அறியவேண்டும்.

“இது தான் சரியான வழியிலான ஆட்சிமுறை என்று எவருக்கும் முன்னால் போய் நின்றுகொண்டு எவ்வாறு உங்களால் கூறமுடியும்? நான் இங்கு கிளப்புவது பாரதூரமான ஒரு பிரச்சினை. வெறுமனே அரசியலமைப்பு பேரவையில் ஒரு வெற்றடத்தை நிரப்புகின்ற ஒரு பிரச்னை



மாத்திரமல்ல, இது மிகவும் பாரதூரமான ஒரு தேசியப் பிரச்சினை. தேசிய வாழ்வில் இருந்து நாம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறோம் என்று பல தசாப்தங்களாக முறையிட்டு வருகின்றோம். அரசியலமைப்பு பேரவையில் இருந்து நாம் விலக்கி வைக்கப்பட்டிருப்பது இதன் ஒரு பிரதிபலிப்பே” என்று சுமந்திரன் சபையில் அரசாங்கத் தரப்பினரை நோக்கி கூறினார்.

தேசிய நல்லிணக்கச் செயன்முறைகளில் தனக்கு இருக்கும் மெய்யான பற்றுறுதி மீது சர்வதேச சமூகதின் நம்பிக்கையைப் பெறுவதற்கு கடுமையாக பாடுபடும் அரசாங்கம் அரசியலமைப்பு பேரவையில் சகல இன, மத சமூகங்களும் அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பெறக்கூடிய வகையில் அமைய வேண்டிய பல்லின, பல்மத மற்றும் பன்முக சமூக அடிப்படைக் கோட்பாட்டை நிராகரிக்கிறது.

தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்க அலுவலக சட்டமூலம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சடடமூலம் போன்ற புதிய சட்டங்களை அரசாங்கம் கொண்டுவருகிறது.

ஆனால் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற நிறுவனங்கள் நடந்துகொள்கின்ற முறையும் அந்த நிறுவனங்களுக்கு தலைமை தாங்குவதற்கு அதிகாரிகள் தெரிவு செய்யப்படுகின்ற முறையும் சிறுபான்மை இனத்தவர்களின் பார்வையில் திருப்தியற்றவையாகவே தொடர்ந்தும் காணப்படுகின்றன.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் மீதான நம்பிக்கையும் நல்லெண்ணமும் நல்லிணக்கத்துக்கான அடிப்படை முன்நிபந்தனைகளாகும்.

என்னதான் புதிய சட்டங்களை கொண்டுவந்தாலும், நிறுவனங்களை அமைத்தாலும் உறுதிமொழிகளை வழங்கினாலும் நியாயமும் சகலரையும் சமத்துவமானவர்களாக நடத்தும் பண்பும் இல்லாத பட்சத்தில் தேசிய நல்லிணக்கம் என்பது ஒரு தொலைதூர கனவுக்கு ஒப்பானதாகவே இருக்கும்.